கோகுலம்

குழந்தைகள் மாதமிருமுறை

15-6-1972

30 காசு



"அம்பிகே! உன் அக அழகளிப்பாய்! ஆன்மசக்தி அருள்வாய்!



ஆறு வயதுக் குழந்தை, கதாதர சட்டோபாத்தியாயா, வயல்காட்டு வழி செல்கையில் வர்ணிக்கவொண்ணு வனப்புக் காட்சியைக் கண்டான். பெரியதொரு கருமுகிலின் பின்னணியில் பனி என வெள்ளிய நாரைக் கூட்டம் பறந்துவரக் கண்டான். பரவசமானான். நினைவிழந்து விழுந்தான்.
அன்றிலிருந்து இந்த நுண்ணுணர்வு பெற்ற பாலன் அடுக்குத் தொடராக ஆன்மிக அநுபவங்களைக் கண்டான் எல்லாச் சமயங்களின் புனித நூல்களையும் ஆழப் பயின்று, தோதாபுரி முனிவரால் உண்மையான வேத தர்மத்தில் தீக்ஷை பெற்று, அவராலேயே ராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்று நாமகரணம் பெற்றது இந்தக் குழந்தைதான்.
ராமகிருஷ்ணர் அன்பின் அவதாரம்: அவர் உலகினை அன்பு செய்தார், பிரபஞ்சம் முழுவதற்கும் அவரது பிரேமை விரிந்தது. ஆண்டவனின் படைப்புகளான சகலத்தையும் நேசித்தார்.
ராமகிருஷ்ணரைப் போன்ற முனிவர்கள் சராசரம் முழுவதையும் தழுவும் அன்பை, அருள் வரப்பிரசாதமாகப் பெற்றவர்கள். அவர்கள் விஷயத்தில் உயிரற்ற அசேதன வஸ்துக்களும்கூட ஆண்டவனுல் நிறைந்து உயிர்ச் சக்தி கொண்டன. அவர்கள் மன்பதை மூலம் மகாதேவனுக்குச் சேவை செய்கிறார்கள். பிரபஞ்சம் முழுவதிலும் பரமன் பூரித்து நிற்கிறான் என்ற நிச்சய உணர்வில் பிறந்தது இச்சேவை.
இந்த மகாத்ம லட்சணம் பாரெங்கும் பரவி நிற்பது.


மபத்லால் க்ரூப்


MAFATLAL GROUP

கோகுலம்
பரிதாபி, ஆனி 2
ஜூன் 15, 1972
மலர் 1 :: இதழ் 5

□

உயிர்களிடத்து
அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்
- பாரதியார்







□


அடுத்த இதழ் கோகுலத்துடன் உங்களுக்கு ஓர் அழகான அன்பளிப்பு வருகிறது.

□

அட்டைப்பட அம்மா எருமை :

அடடே! போனவாரம்தான் சொன்னேன். உடனே நம்ம குழந்தையை அட்டையில் போட்டுட்டீங்களே!

வண்ணப்படம் :
ஆர். பி. எஸ். மணி



ஆத்திசூடி



ராஜாஜி

கண்டொன்று சொல்லேல்

ஒன்று கண்டு ஒன்று சொல்லாதே. உண்மை பேச வேண்டும். அனைவரும் சுகமாகக் கூடி வாழ இது மிகவும் அவசியமான தருமம். பொய் பேசபவன் ஊருக்குப் பகைவனாவான். எல்லாரும் உண்மை பேசி ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து சமூக வாழ்வு நடத்த வேண்டும். ஒருவன் கண்டதை மற்றவர்களுக்குக் கண்டபடி உண்மையாகச் சொன்னால் தான் உதவியாகும். ஒருவன் பொய் சொன்னால் அவன் தன் கண்களை ஊருக்கு உதவ மறுத்தபடியாகும்.

ஙப்போல் வளை

இதற்குப் பொருள் சரியாக விளங்கவில்லை. பல வித்துவான்கள் பலவிதமாய்ச் சொல்லுவார்கள். அடியில் கண்டது அதிகமாய் வழங்கி வரும் உரை:

ங் என்ற மெய்யெழுத்துத்தான் பதங்களில் உபயோகப்படும். ஙா, ஙி முதலிய உயிர் மெய்யெழுத்துக்கள் உபயோகப்படாது. ஆனாலும் ங முதல் ஙௌ வரை உயிர் மெய்யெழுத்துக்களாக எழுதியும் சொல்லியும் பயிலுகிறோம். அதைப் போல் நாம் நம்மைச் சேர்ந்தவர்கள் பயனற்றவர்களாயினும் அவர்களைத் தள்ளிவிடாமல் கூடி வாழ வேண்டும்.

ங என்ற எழுத்தின் உருவத்தைப் போல் நீ தினமும் வளைந்து காலடியைக் கையால் தொட்டு நிமிர்ந்து நிற்கும் தேகப்பயிற்சியைச் செய் என்றும் உரை கூறலாம். இது குழந்தைகளுக்கு உபயோகமான பொருளாகும்.

சனி நீராடு

சனிக்கிழமை தோறும் தலையிலும் உடம்பிலும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்.

நீராடு : ஸ்நானம் செய் - **சனி:** சனிக்கிழமையில் வழக்கம்போல் அதாவது எண்ணெய் தேய்த்துக் கொள்.

இதுவும் குழந்தைகளுக்குத் தேக ஆரோக்கியத்தை முன்னிட்டுச் சொன்னது.

ஞயம்பட உரை


ஞயம் : நயம், இனிமை. - **ஞயம் பட :** இனிமை உண்டாகும்படி - **உரை :** பேசுவாய்.

பிறரிடம் பேசும்போது அருவருப்பு அல்லது வருத்தம் உண்டாக்காமல் இனிய சொற்களைப் பேச வேண்டும். உண்மையை மறைத்துப் பொய் சொல்ல வேண்டுமென்றல்ல. உண்மையே சொல்ல வேண்டும். ஆனால், பேசும் வகை கூடியளவு இனிமையாக இருக்க வேண்டும்.

இடம்பட வீடு எடேல்

இடம்பட: இடம் மிகுதியாக - **வீடு :** வீட்டை - **எடேல் :** கட்டாதே.

வீடு கட்டும்போது உன் குடும்பத்துக்கு வேண்டிய அளவுக்கு மிஞ்சிப் பெரியதாகக் கட்டாதே. பெரிய வீட்டில் உபயோகப்படாத பாகங்கள் வீட்டின் அழகைக் குறைக்கும். இப்போது பணம் இருக்கிறது என்று பெரிய வீடாகக் கட்டினால் பிறகு நீயோ உன் மக்களோ ஏழைகளான காலத்தில் அந்தப் பெரிய வீடு ஒரு பெரும் பாரமாகும். காப்பாற்றுவது கஷ்டமாகும்.



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்



எம்பெருமான் இட்ட கட்டளையின் படி வசுதேவர் குழந்தையை ஒரு தட்டில் வைத்துச் சிரத்தின் மீது தாங்கினார். சிறைச்சாலையின் இரும்புக் கதவுகள் தாமே திறந்தன; கைகால்களிலிருந்த விலங்குகள் விலகின; சிறைக் காவலர்கள் மெய்மறந்து சவம்போல் மயங்கிக் கிடந்தார்கள்.

வசுதேவர் எம்பெருமானைச் சென்னிமேல் தாங்கிக் கொண்டு செல்லும் போது ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளைக் குடைபோல் விரித்து நிழல் கொடுத்துக் கொண்டு சென்றான்.

எதிரே அலைகளை மோதிக் கொண்டு யமுனா நதி பெரு வெள்ளமாகக் குறுக்கிட்டது. வசுதேவர் ''நாராயணா! நாராயணா!'' என்று பாராயணம் செய்தார். இராமச்சந்திரமூர்த்திக்கு மகா சமுத்திரம் வழி விட்டதுபோல் யமுனா நதி வசுதேவருக்கு வழிவிட்டு விலகியது. இந்த அதிசயத்தைக் கண்ட வசுதேவர் பகவானுடைய பெரும் கருணையை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தார். வான வீதியில் வானோர்கள் நின்று சிரமும் கரமும் குவித்துத் துதி செய்தார்கள்.

''வேதங்களும் காணாத வித்தகனே! ஆதிமூலம் என்றழைத்த ஆனைக்கருள் புரிந்த அண்ணலே! உலகம் யாவையும் உண்டு உமிழ்ந்த ஓங்காரப் பொருளே! ஞானமே வடிவாகிய ஆனந்தக் கடலே! அருட் பெருஞ் ஜோதியே போற்றி; போற்றி!'' என்று பரவிப் பணிந்தார்கள்.

வசுதேவர் ஆயர்பாடியை அடைந்தார். அங்கு விஷ்ணு மாயையால் கோபாலர்களும் கோபிகைகளும் நன்கு உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அங்கு யசோதைக்கு மாயா சக்தி பிறந்திருந்தாள். வசுதேவர் பகவானை யசோதையின் அருகில் வைத்து, மாயா சக்தியை எடுத்துக்கொண்டு திரும்பினார். சிறைச்சாலைக்கு வந்து தேவகியின் அருகில் வைத்தார். முன் இருந்த இடத்தை அடைந்தார். ஐயன் ஆணையால் சிறைச்சாலையின் கதவுகள் மூடப்பட்டன. வசுதேவருக்கும் தேவகிக்கும் கை, கால் விலங்குகள் முன்போல் பொருந்தி நின்றன. சிறைக்கூடம் அதிரும்படி அப் பெண் மகவு அழுதது.

காவலர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள். விரைந்து ஓடிச் சென்று கம்சனைப் பணிந்து, ''மன்னர் பெருமானே! சிறைக்கூடத்தில் தேவகி யம்மைக்குக் குழந்தை பிறந்து விட்டது. அக் குழந்தையின் அழுகையால் சிறைக் கூடமே நடுங்குகின்றது'' என்று கூறினார்கள்.

கம்சன் கடும் சினங் கொண்டான். இதுதான் என்னைக் கொல்லப் பிறந்த எட்டாவது குழந்தை. அஷ்டமத்துச் சனி. இதைக் கொன்று மதியால் விதியை வெல்லுவேன்'' என்று கூறி எழுந்தான். தண்டாயுதத்தை ஏந்திய கண்டனைப்போல் வாளை ஏந்தி விரைந்து வந்தான். சிறைச்சாலையின் படி தடுக்கி



வீழ்ந்தான். அவனுடைய மணி முடி நழுவி வீழ்ந்தது. காற்றடைத்த பந்து போல் எழுந்து தேவகியின் அருகில் இருந்த குழந்தையைத் தாவி எடுத்தான்.

தேவகி அண்ணன் அடிமலர் மீது வீழ்ந்தாள். துன்பக் கடலில் ஆழ்ந்தாள். ''அண்ணா! அண்ணா! என் வயிற்றில் பிறந்த ஆறு புதல்வர்களைக் கொன்றனை. இது பெண் குழந்தை. இதனால் உனக்கு என்ன தீங்கு நேரும்? இம் மகவைக் கொல்லாதே. பெண் குழந்தையைக் கொல்லுதல் பெரும் பாதகம்'' என்று கூறி அழுது வேண்டினாள்.

கம்சன் தங்கையைத் தாட்சண்யம் இன்றி ஒருபுறத்தே பிடித்துத் தள்ளினான். அப் பெண் குழந்தையின் இரு கால்களைப் பிடித்து நிலத்தில் எற்றிக் கொல்ல ஓங்கினான்.

அக் குழந்தை அவன் கையிலிருந்து நழுவி அகோர வீர மகா காளியாய் விண்ணிலே நின்றாள். ஆயிரம் ஆயிரம் சிரமாலைகள். கையில் திரிசூலம்; நெற்றிக் கண்; நெருப்புப் பொறி பறக்கும் கோப நேத்திரங்கள். அகோரப் பற்கள் கூடிய பேருருவுடன் காட்சியளித்தாள்.

''மூடனே! என்னைக் கொல்ல உன்னால் முடியாது; உன்னைக் கொல்ல என் அண்ணன் அவதரித்திருக்கிறான். என் அண்ணனால் நீ அழியப் போகிறாய். தீய ஆட்சி நீண்ட காலம் நிலைபெறாது'' என்று கூறி நெருப்புப் பொறிகள் சிந்தி மறைந்து விட்டாள். இதனைக் கண்டு கேட்ட கம்சன் கதியும் மதியும் கலங்கி நின்றான்.

கம்சனுடைய உடலும் உள்ளமும் நடுங்கின; உணர்வுகள் ஒடுங்கின. வசுதேவரையும் தேவகியையும் விலங்கை அகற்றிச் சிறையிலிருந்து விடுதலை செய்தான்.

''வசுதேவரே! நீர் வருந்த வேண்டாம். வீணே உங்கள் புதல்வர்களைக் கொன்றேன். எல்லாம் விதி செய்த விளையாட்டு. விதி வழி மதி செல்லும். நீர் நடந்ததை மறந்து விடும்'' என்று இன்னுரை கூறினான். வசுதேவரையும் தேவகியையும் அவர்களின் மாளிகைக்கு அனுப்பினான்.

கம்சன் கவலை தோய்ந்த மனத்துடன் தன் பொன் மாளிகையைச் சேர்ந்தான். அவனுக்குப் பலப் பல தீய கனவுகள் தோன்றின.

மறுநாள் மந்திரிகளுடன் ஆராய்ந்தான். அறிவில்லாத அமைச்சர்கள், அவனை நோக்கிக் கூறலானார்கள்:

''மன்னர் பெருமானே! நீர் மனக் கலக்கத்தை விடும். தேவர்கட்கு மூலம் நாராயணர். நாராயணருக்கு மூலம் அறமும் அந்தணர்களும் யாகங்களும் வேதங்களும் பசுக்களும் தவமும் ஆகும். ஆதலால் அந்தணர்களையும் அறத்தையும் வேதங்களையும் நாம் கெடுத்தால் நாராயணனுடைய வலிமை குன்றும். நீர் சமானமில்லாத வலிமை உடையவர். உம்மைக் கண்டால் தேவரும் பயந்து ஒளிவார்கள். உம்மைக் கண்டு மண்ணும் விண்ணும் நடுங்கும். உமது ஆட்சி மாட்சியுடையது'' என்றார்கள்.

கம்சன் அது கேட்டு மகிழ்ந்தான். தீயவர்களை ஏவி வேத நெறிகளைத் தடுத்தான். வேதியர்கட்குத் துன்பம் கொடுத்தான். முனிவர்களைத் துன்புறுத்தினான்.

(தொடரும்)





முன்னொரு காலத்தில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனிடம் பல அடிமைகள் இருந்தார்கள். அந்த அடிமைகளில் ஒருவன் ரொம்ப நோஞ்சானாக இருந்தான். பார்க்கவும் அழகாக இருக்க மாட்டான். அவனை மற்ற அடிமைகள் நையாண்டி செய்வார்கள். ஆனால் அந்த அப்பாவி அடிமை யாருடனும் சண்டையிட மாட்டான்.

ஒரு சமயம் பணக்காரன் வியாபார விஷயமாக நெடுந்தூரப் பிரயாணத்தை மேற்கொண்டான். இன்றைய நாட்களைப் போல் போக்குவரத்துச் சௌகரியங்கள் கிடையாது. மூட்டைகளை அடிமைகள் தான் சுமந்துகொண்டு போவார்கள். ஆகவே பணக்காரன் தன் அடிமைகளில் இருபது பேர்களைத் தேர்ந்தெடுத்தான். ''இந்தப் பிரயாணம் பல நாட்கள் நீடிக்கும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூட்டையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும். நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் மூட்டையை எக்காரணங் கொண்டும் வழியில் மாற்றிக் கொள்ளக் கூடாது. இதோ இருபது மூட்டைகள் உள்ளன. அவரவர்களுக்கு விரும்பியதை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று ஆணையிட்டான் அந்தப் பணக்காரன்.

உடனே அடிமைகளிடையே பெரிய அடிதடியே ஏற்பட்டது. ஒவ்வொருவரும் மிகச் சிறிய மூட்டையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதற்காக அப்படி முட்டி மோதிக் கொண்டார்கள். இவர்களுடைய போட்டா போட்டியில் ஒரே ஒரு அடிமை மட்டும் கலந்து கொள்ளவில்லை. ஒதுங்கி ஓரமாக நின்று கொண்டிருந்தான். அவன் யார் தெரியுமா? அந்த நோஞ்சான் அடிமைதான். எல்லாரும் அவரவர்களுடைய மூட்டையைப் பொறுக்கிக் கொண்டதும், அந்தச் சின்ன அடிமை மெள்ள நகர்ந்தான். அங்கு மிஞ்சி இருந்தது ஒரே ஒரு மூட்டைதான். ஆனால் அதுதான் அங்கிருந்த மூட்டைகளிலேயே மிகப் பெரியது. அந்த அப்பாவி அடிமையையும் விடப் பெரிதாக இருந்தது அது. தனக்கு இத்தனை பெரிய மூட்டையை அவர்கள் விட்டு வைத்ததற்காக அவன் ஆத்திரப்படவில்லை; அலுத்துக் கொள்ளவில்லை. மௌனமாக அதைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு தன் சகாக்களைத் தொடரலானான். அதைக் கண்ட மற்ற அடிமைகள் உரக்கச் சிரித்தார்கள். ''உன்னைப்போல ஓர் அடி முட்டாளைப் பார்த்ததே இல்லை. இருப்பதற் குள்ளேயே மிகப் பெரிய மூட்டையை எடுத்துக் கொண்டிருக்கிறாயே? பிரயாணம் முழுவதும் நீ இத்தனை பெரிய மூட்டையை எப்படிச் சுமந்து வரப்போகிறாய்? மடையன், மடையன்!'' என்று கேலியாக நகைத்தார்கள்.

மூட்டையின் கனம் அழுத்தத் தள்ளாடியபடி நடந்த சின்ன அடிமை புன்முறுவலுடன் கூறினான்: ''இந்த மூட்டையையும்



அடிமை சொன்ன அழகான கதைகள்

யாரேனும் ஒருவர் தூக்கித் தானே ஆக வேண்டும்? தவிர இந்த மூட்டைக்கு ஒரு மாய சக்தி உண்டு. 'இதை முதலிலேயே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளாமல் போனோமே' என்று நீங்கள் பின்னால் வருத்தப்பட்டாலும் படலாம். யார் கண்டார்கள்?'' இதைக் கேட்ட பத்தொன்பது அடிமைகளும் பகபகவென்று சிரித்தார்கள். ''அப்படி வேறு நீ கனவு காண வேண்டாம், அசட்டுப் பயலே! நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்கு ஏற்ற சரியான மூட்டைகளைத்தான் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நெடு நாள் பயணத்தில் இந்தப் பெரும் மூட்டையைச் சுமக்கப் போகும் நீதான் 'சின்ன மூட்டையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கக் கூடாதா?' என்று ஆதங்கப்படப் போகிறாய்'' என்று பரிகசித்தனர். ஒல்லி அடிமை பதில் ஒன்றும் சொல்லவில்லை.

நாட்கள் நகர்ந்தன. பிரயாணம் நீண்டு கொண்டே போயிற்று. கரடுமுரடான மலைப் பாதைகளில். ஒல்லி அடிமையின் பெரிய மூட்டையில் ஏற்படும் விநோதமான மாறுதலை மற்ற அடிமைகள் கவனிக்கலானார்கள். ''அந்தச் சோனி அடிமை கூறியதுதான். எத்தனை உண்மை! அந்தப் பெரிய மூட்டை நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே வருகிறதே! உண்மையிலேயே அது மாய சக்தி வாய்ந்தது தானோ?'' நாளாக நாளாக அது தன் பருமனைக் கொஞ்சம் 'கொஞ்சமாக இழந்து கொண்டே வந்து மற்றவர்களின் மூட்டையை விடச் சின்னதாகிவிட்டது. உடல் வலிமையிலும் உருவத்தின் ஆகிருதியிலும் பெரியவர்களாக விளங்கி உழைப்புக்கு ஒதுங்கிய சோம்பேறி அடிமைகள் அப்போதுதான் தாங்கள் எத்தனை பெரிய முட்டாள்கள் என்பதைப் புரிந்து கொண்டார்கள். தங்களால் கொடுமை செய்யப்பட்ட, இளைத்த உடலைக் கொண்ட அடிமை அறிவால் எப்படி உயர்ந்தவன் என்பதையும் அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

அது சரி, அத்தனை பெரிய மூட்டை உருமாறிச் "சுருங்குவானேன்? நிஜமாகவே அதில் ஏதாவது மாய மந்திரம் இருந்ததா? இல்லவே இல்லை. அந்தப் பெரிய மூட்டையில் அந்த நீண்ட நெடுநாள் பயணத்துக்கு, அத்தனை பேருக்கு மான உணவுப் பொருள் இருந்தது. ஒவ்வொரு உணவு வேளையிலும் அந்த மூட்டையி லிருந்துதான் உணவுப் பொருள் எடுத்து எல்லோருக்கும் விநியோகிக்கப்பட்டது. ஒவ்வொரு சாப்பாட்டுக்குப் பிறகும் அந்த நோஞ்சான் அடிமையுடைய மூட்டையின் கனம் குறையத்தானே செய்யும்?

பிரயாணத்தின் முடிவில் அந்தச் சின்ன அடிமை காலிச் சாக்கைத் தோள்மீது போட்டுக் கொண்டு கையை வீசியபடியே நகரத்துக்குள் நுழைந்தான். தாங்கள் சுமக்கும் மூட்



டைய எப்போது கீழே இறக்கப் போகிறோம் என்று மற்றவர்கள் தவிப்புடன் இருந்தார்கள். அவர்கள் அத்தனை பேர் தூக்கி வந்த மூட்டைகளிலும் வியாபாரப் பொருட்கள் இருந்தன. அவை அந்தப் புதிய நகரத்தில் விற்கப்பட வேண்டியவை.


அப்பாவியும் அழகற்றவனும் பலமில்லாதவனுமான அந்தச் சின்ன அடிமை தன்னுடைய பொறுமையினாலும் புத்திசாலித்தனத்தினாலும் எல்லாருடைய அன்புக்கும் பாத்திரமானான். ஆரம்பத்தில் அவனைக் கேலி செய்த தோழர்கள்கூட அவனிடம் அன்பும் மதிப்பும் காட்டினர். பணக்காரன் அந்தச் சின்ன அடிமைக்கு விடுதலையே வழங்கினான். அவனுக்குச் சுதந்திரம் கிடைத்ததில் மற்ற அடிமைகளுக்கு ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியானாலும் மற்றொரு விதத்தில் அவர்கள் வேதனைப்பட்டார்கள், தங்களை விட்டு அவன் பிரிந்து போகிறானே என்று. அவனோடு வேலை செய்யும் போதோ, பிரயாணம் செய்யும் போதோ யாருக்கும் அலுப்போ, களைப்போ ஏற்படாது. ஏனென்றால் அந்தச் சின்ன அடிமை வழியெல்லாம் அழகழகான கதைகள் சொல்லி எல்லாரையும் மகிழ்விப்பான்.

சின்ன அடிமையும்கூடத் தனக்கு விடுதலை கிடைத்ததில் மகிழ்ச்சி கொள்ளவில்லை. நினைவு தெரிந்ததிலிருந்து அடிமையாக இருந்த அவனுக்கு உழைப்பைத் தவிர வேறு எதுவுமே தெரியாது. ஆகவே, எப்படிப் பிழைப்பது? வேலை செய்வதைத் தவிர அவனுக்குத் தெரிந்த ஒரே கலை, கதை சொல்லுவதுதான். ஆகவே, அந்த அப்பாவி அடிமை கடை வீதிகளிலும், நான்கு சாலைகள் கூடுமிடங்களிலும் சந்தைகளிலும் நின்று கதைகள் கூறித் தன் உணவுக்கு வழி தேடிக் கொள்ளலானான். அவன் கூறும் குட்டிக் கதைகளைக் கேட்க மக்கள் வந்து கூடினார்கள். அவன் சிரிக்கச் சிரிக்கக் கதைகளைச் சொன்னான். கதை கேட்டவர்களைச் சிந்திக்க வைத்தான். அவன் புகழும், அவன் கூறும் கதைகளின் புகழும் அந்த நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரவியது. அந்நாட்டு மன்னர் அவனை வரவழைத்தார். தம் அவையில் அவனுக்கு ஒரு பதவியைக் கொடுத்தார். என்ன பதவி? அவன் அவர் முன்னிலையில் கதைகள் சொல்ல வேண்டும்!

அந்தச் சின்ன அடிமையின் வறுமை ஓடியது. நடுக்கும் குளிரில் அடைத்திருக்கும் வீட்டுக் கதவுகளின் அடியில் முடக்கிக் கொண்டு கழித்த துயர் மிகுந்த இரவுகளை அவன் நினைத்துக்கொண்டான். ஒரு கவளம் உணவைப் பெறப் புதிய கதைகளை உருவாக்க மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டதை எண்ணிப் பார்த்தான். அந்த உழைப்பினால், அப்படியெல்லாம் தான் கஷ்டப்பட்டதினால் தான் இன்று மன்னரின் அவையில் கதை சொல்லும் மகிமை தனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை அவன் மறக்கவில்லை. சின்ன அடிமை தன் சின்னச் சின்னக் கதைகளால் மன்னரையும் மற்றுமுள்ள அவையோரையும் மகிழ்விக்கலானான். அவனது கதைகளில் மிருகங்களும் பறவைகளும் மனிதர்களைப் போலவே பேசும், சிரிக்கும், ஒவ்வொரு கதையிலும் ஒரு நீதியும் படிப்பினையும் பொதிந்திருக்கும். அந்த அடிமை கூறிய நூற்றுக்கணக்கான குட்டிக் கதைகளைக் கேட்ட மக்களுக்கு அலுப்பே ஏற்படவில்லை. அப்படிப்பட்ட சிரஞ்சீவியான அற்புதக் கதைகளைக் கூறினான், அந்த அழகற்ற அடிமை.


அவனுக்கு எழுதத் தெரியாது, படிக்கத் தெரியாது. கதை மட்டுமே சொல்லத் தெரியும். அவன் கூறிய கதைகளைக் கேட்ட மக்கள் பிற்காலத்தில் அதைத் தங்கள் குழந்தைகளுக்குக் கூறினார்கள். அவர்கள் அதைத் தங்கள் சந்ததிகளுக்குச் சொன்னார்கள். இப்படியே வாய்மொழியாகவே பரவிய இக்கதைகளைப் பின்னால் சிலர் சேகரித்து எழுதி வைத்தார்கள். பிற்காலத்தில் இந்த அற்புதமான நீதிக் கதைகள் புத்தகங்களாக வெளிவந்தன. அந்தச் சின்ன அடிமையின் கதைகள், அவன் மறைவுக்கு எத்தனையோ நூற்றாண்டுகளான பிறகும் இன்றும் போற்றிப் புகழப்படுகிறது. இவ்வளவு பிரபலமான அந்த அடிமையின் பெயர் என்ன தெரியுமா? ஈசாப். புராதன கிரேக்க நாட்டில் வாழ்ந்த அடிமைதான் இந்த ஈசாப். இவரது நீதிக் கதைகள் இன்று உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. நம்முடைய பஞ்ச தந்திரக் கதைகள், இதோபதேசக் கதைகள் ஆகியவற்றுக்கும் ஈசாப்பின் நீதிக் கதைகளுக்கும் ஒற்றுமை இருப்பதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். கீழை நாடுகளிலிருந்து வந்த வியாபாரிகளிடம் கேட்டறிந்துதான், ஈசாப் தன் கதைகளை உருவாக்கி இருக்க வேண்டும் என்பது சில ஆராய்ச்சியாளரின் முடிவு. நாம் அந்தக் காலத்திலேயே கடல் கடந்து வாணிபம் செய்ய மேலை நாடுகளுக்குப் போயிருக்கிறோமே? எப்படியானாலும் ஈசாப்பின் நீதிக் கதைகள் தனித்தன்மை வாய்ந்தவை. நீங்கள் அவசியம் படிக்க வேண்டியவை. **—வீ.கே.எம்.**





கார் விடும் அந்தப் பையனைப் பாருங்கள். அவன் முகத்தில் எத்தனை தன்னம்பிக்கை? கைதேர்ந்த காரோட்டியின் லாகவத்தோடு ஸ்டீயரிங்கை வளைத்து ஒடித்துத் திருப்பும் அந்த அழகைப் பாருங்கள். குறுக்கிடும் தடைகளைச் சாதுரியமாகச் சமாளித்தபடி காரோட்டப் பழகும் இந்தச் சிறுவன் பிரிட்டனைச் சேர்ந்தவன். இவன் ஓட்டுவது பந்தய மாடல் பொம்மைக் கார். மூன்று குதிரை வேக மோட்டாரைக் கொண்டது இது. இதற்கு கியர், கிளட்ச் ஏதும் கிடையாது. நல்ல முறையில் காரோட்டும் 'டெக்னிக்'கைக் கற்றுத் தர ஒரு கார் டிரைவிங் பள்ளியே நடத்துகிறார் மைக் ஹக்ஸ் என்பவர். ஆறு வயதுப் பையன்களுக்கும் பெண்களுக்கும் இந்தப் பள்ளியில் பயிற்சி அளித்து, திறமை மிக்க வருங்காலக் காரோட்டியை உருவாக்குகிறார்கள். பள்ளியில் சேர்ந்து சில நிமிஷங்கள் பாடம் கேட்டதுமே ஒரு சராசரியான குழந்தை; பயிற்சிப் ப்ள்ளியின் மைதானச் சாலையில் தன் காருடன் கிளம்பி விடுகிறது. போதகர் பின்னாலேயே ஓடி வருவார். காரின் பிரேக் காருக்கு வெளியேதான் இருக்கும், வாத்தியாரின் கைக்கு எட்டும் வகையில்! ஆனால் காரோட்டும் சிறுவனுக்கும் சிறுமிக்கும் நிஜமாகவே தாங்கள் ஒரு காருக்குள் உட்கார்ந்து ஓட்டும் உணர்வு உண்டாகி யிருக்கும். ரப்பரினாலான பல பிரமிட்டுகளை ஆங்காங்கே நிறுத்தி நெரிசலான சாலைப் போக்குவரத்துப் போன்ற உணர்வை உண்டாக்கி யிருப்பார்கள். இப்படிச் சிறு வயதிலேயே குழந்தைகள் முறையான கார் பயிற்சியையும் சாலை விதிகளையும் கற்றுக் கொள்வதினால் பிற்காலத்தில் திறமை மிக்க காரோட்டிகளாக விளங்குகிறார்கள். மேனாடுகளில் குழந்தைகளின் மன வளர்ச்சி உடல் வளர்ச்சிகளில்தான் எத்தனை அக்கறை காட்டுகிறார்கள்?

- நன்றி: பி. ஐ. எஸ்.



தெரியுமா?

71. ஹாட்ரியன் சுவர் — என்று கேள்விப்பட்டதுண்டா? இது இங்கிலாந்தில் இருக்கிறது. உத்தேசமாக இதன் நீளம் என்ன? இதைக் கட்டியது யார்?

72. காமன்வெல்த் நாடுகளில் அயர்லாந்து அங்கம் வகிக்கிறதா? இல்லையானல் அது எப்போது தன்னை அதிலிருந்து விடுவித்துக் கொண்டது?

73. இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரியாக யாரைக் கருதுகிறீர்கள்?

74. பிரிட்டிஷ் பறவைகளில் மிகச் சிறிய பறவையின் பெயர் என்ன?

75. உலகின் தெற்கு முனை (South Pole)க்கு யார் முதலில் போனது?

76. நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு மறுபடியும் கிளம்பிய இடத்துக்கே வந்த முதல் மனிதர் யார்?

77. உலகின் வடக்கு முனையை முதலில் கண்டுபிடித்தது யார்?

78. உலகை முதன் முதலில் கடல் மார்க்கமாகச் சுற்றி வந்த ஆங்கிலேயர் யார்?

79. 'எண்டவர்' என்ற கப்பலில் பிரயாணம் செய்த பிரபலமான ஆங்கிலேயர் யார் தெரியுமா?

80. ஜப்பானின் தேசியக் கொடியில் சூரியன் இருக்கும். இதே போன்று இன்னெரு நாட்டுத் தேசியக் கொடியிலும் சூரியன் இடம் பெற்றிருக்கிறது. அது எந்த நாடு?

81. முதல் இருப்புப் பாதை எங்கிருந்து எங்கு போடப்பட்டது?

82. நோபெல் பரிசு என்று கேள்விப் பட்டிருப்பீர்களே? அதை ஏற்படுத்திய டாக்டர் ஆல்பர்ட் நோபெல் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

83. பிரிட்டனின் மிகப் பழைய கடிகாரம் எங்குள்ளது?

84. இஸ்லாமியர்களின் தலைவரும் தேவ தூதருமான முகமது பிறந்தது எங்கே?

85. இந்தோனேஷியாவின் தலைநகர் எது?

86. சுமத்திராவின் தென் கிழக்கே அதை ஒட்டினற்போல ஒரு தீவு இருக்கிறது. அதன் பெயர் என்ன?

87. கார்டினல் உல்ஸியின் பிறந்த ஊர் எது?

88. உலகிலேயே மிக அதிகமான கந்தகம் எந்த நாட்டில் கிடைக்கிறது?

89. டுனிஸ் வளைகுடாவில் ஒரு பிரபலமான நகரம் உள்ளது. அதன் பெயர் என்ன?

90. பூமியிலிருந்து சந்திரன் எத்தனை தூரத்தில் இருக்கிறது?

91. சூரியனிலிருந்து வெகு தொலைவில் உள்ள கிரகம் எது?

92. 1959ம் ஆண்டு விண்வெளியில் பயணம் செய்து சந்திரனின் மறு பக்கத்தைப் படம் பிடித்த விண்வெளி வாகனத்தின் பெயர் என்ன?

93. சூரியப் பாதையில் உள்ள கிரகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

94. பூமியை ஒரு முறை சுற்றுவதற்குச் சந்திரனுக்கு ஆகும் நாட்கள் சராசரியாக எவ்வளவு?

95. ரொட்டி பஞ்சுபோல் உப்பிக் கொண்டு வர அதனுடன் சேர்க்கப்படுவது எது?

96. பாப்பி என்று ஒரு தாவரம். அதிலிருந்து ஒரு விலை உயர்ந்த மருந்து தயாரிக்கப் படுகிறது. அதன் பெயர் என்ன?

97. ஆர்க்கெஸ்ட்ராவின் தலைவர் வாசிக்கும் வாத்தியத்தின் பெயர் என்ன?

98. விலைமதிப்பற்றதாகக் கருதப் படும் ஒரு கல் வெறும் கரி. அது என்ன?


99. ஆப்பிரிக்காவின் மிக உயரமான மலை எது?

100. நீரில் விளையாடும் போலோ ஆட்டத்தில் ஒரு டீமில் எத்தனை பேர் இருப்பார்கள்?

விடைகள் : 71. ரோமானியரால் கட்டப்பட்டது கி. பி. 122ல். ரோமானியச் சக்கரவர்த்தி ஹாட்ரியன் காலத்தில். இதன் நீளம் 74 மைல் 20 அடி உயரம் 8 அடி அகலம் 72. காமன்வெல்த்தில் இல்லை 1949ல் விலகியது 73. சர் ராபர்ட் வால்போல் 74. ரென் Wren 75. அமுட்ஸன் 76. பார்த்தலோமியோ டியாஸ் 77. ராபர்ட் பியரி 78. ஸர் பிரான்ஸிஸ் டிரேக் 79. காப்டன் குக் 30. அர்ஜன்டினு 81. இங்கிலாந்திலுள்ள ஸ்டாக்டனிலிருந்து டார்லிங்டன் நகரத்துக்கு 82. ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்தவர் 83. ஹாம்ப்டன் கோர்ட் அரண்மனையில் 84. மெக்காவில் 85. ஜாகர்தா 86. ஜாவா 87. இப்ஸ்விச் 88. ஐக்கிய அமெரிக்காவில் 89. கார்த்தேஜ் 90. 2,38,860 மைல்கள் 91. ப்ளூடோ 92. லூனிக்-3 93. ஒன்பது 94. 29½ நாட்கள் 95. ஈஸ்ட் 96. ஓபியம் 97. வயலின் 98. வைரம் 99. கிலிமஞ்சாரோ 100. ஏழு பேர்கள் இருப்பார்கள்.

சிரிக்கச் சிரிக்க











சாமா

அப்பளம்!

வட்ட மான நிலவுபோல்
வடிவில் காணும் அப்பளம்!
திட்டம் போட்டே நாங்களும்
'தீர்த்துக் கட்டும்' அப்பளம்!

நெய்யில் பொரித்த அப்பளம்!
நேர்த்தியான அப்பளம்!
கையில் எடுத்து விரும்பியே
கடித்துத் தின்னும் அப்பளம்!

அம்மா சுட்ட அப்பளம்!
அழகாய்த் தோன்றும் அப்பளம்!
சும்மா சும்மா தின்றிடில்
சோற்றுக் கில்லை அப்பளம்!

மு. தியாகராஜன்



அதிசய மருந்துவர் யார்?

காசில்லாமல் மருந்தில்லாமல்
காரில்லாமல் மருத்துவர்
ஓசியாக வந்துடம்பில்
ஊசிபோட்டுச் செல்லுவார்!

நாலுபேர்முன் நின்றிடாமல்
நடந்துசென்றே மறையுவார்!
காலுச்சத்தம் கேட்டிட்டாலும்
கள்ளன்போல ஓடுவார்!

தூங்குமூஞ்சி மனிதர்களைத்
துள்ளிஎழவே செய்யுவார்!
வீங்குமட்டும் உடலைக்குத்தி
வேதனையைச் செய்யுவார்!

பஞ்சுமெத்தை, தலையணை, பாய்
பறவைக் கப்பல் காரிலும்
நெஞ்சிலின்பம் கொண்டுநாளும்
நீங்கிடாமல் வாழுவார்.

யாரேஅந்த மருத்துவர்?
அறிந்துசொல்வீர் பொருத்தமாய்
யாரேசொல்ல வல்லவர்?
அவரேமிகவும் நல்லவர்!

கவிஞர் தமிழ்முடி


[illegible]




ஓடும் கண்ணனைப் பிடியுங்கள்!

வெண்ணெய் திருடிய கண்ணனை விரட்டுகிறாள் கோபிகை. பாய்ச்சல் காட்டுகிறான் பாலகோபாலன். இதுதான் விளையாட்டு. இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். தாயக் காயை உருட்டி ஆறு விழச் செய்து ஆட்டத்தை ஆரம்பியுங்கள். பிறகு காயை எண்களின் வரிசைப்படி நகர்த்திக் கொண்டு போக வேண்டும். அம்புக் குறியுள்ள வட்டத்துக்குக் காய் வருமானால் அம்புக் குறி காட்டும் திசையில் அது குறிப்பிடும் கட்டத்துக்குப் போக வேண்டும். அம்புக் குறி இல்லாத வட்டத்தில் காய் மேலே நகர வேண்டியதுதான். யார் 60வது கட்டத்தை முதலில் அடைகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்கள்.

- வாண்டு







சுண்டு குண்டு சீமாத் தாத்தா!


"ஏய், சுண்டு குண்டு! ஓடி வாங்க! எங்கிட்டே மூணு பேருக்கு சினிமா பாஸ் இருக்கு போகலாம்'' என்றான் ரகு. சுண்டுவும் குண்டுவும் அப்போது மாடியில் இருந்ததால் ரகுவின் குரல் கேட்டு இறங்கி வந்தார்கள். வீட்டிலும் ஒருவரும் இல்லை. சீமாத் தாத்தாவையும் காணோம். வாசல் கதவும் பூட்டப்பட்டிருந்தது. பையன்களால் வெளியே வர முடியவில்லை. மீண்டும் மாடிக்கு வந்து, ''ஏய், ரகு! நாங்க எப்படிடா வெளியே வரது? வீடு பூட்டியிருக்குடா!'' என்றார்கள். ''அங்கேயே இருங்க. நான் என் வீட்டுக்குப் போய் எங்கள் ஏணியை எடுத்து வருகிறேன்'' என்று ஓட்டம் பிடித்தான் ரகு. வீட்டில் ஏணி இல்லை. தாயாரைக் கேட்டான். ''ஏணி இல்லேன்னா, அடுத்த வீட்டுச் சீமாத் தாத்தாதான் தூக்கிண்டு போயிருப்பார். மனுஷன் கேட்காமலே எடுத்துண்டு போகிறவர்னா!'' என்றாள் ரகுவின் தாயார். ரகு மீண்டும் ஓடி வந்தான். ''எங்க ஏணி உங்க வீட்டின் பின் பக்கத்தில்தான் சாத்தியிருந்தது. இதோ எடுத்து வந்துவிட்டேன்'' என்று ஏணியைக் கொண்டு வைக்கச் சுண்டுவும் குண்டுவும் அதன் வழியாக மாடியிலிருந்து இறங்கினார்கள். ரகு ஏணியைத் தன் வீட்டில் கொண்டு வைத்துவிட்டு வந்தான்.

கொம்மாளம் போட்டுக் கொண்டு எல்லாரும் சினிமாக் கொட்டகையை அடைந்தார்கள்.


அவர்கள் சென்றது காலைக் காட்சிக்கு. அப்பொழுது மணி பத்தரை இருக்கும். காட்சி முடிந்தபோது மணி பன்னிரண்டரை. நல்ல வெய்யில். தெருவில் ஜன நடமாட்டமே இல்லை. ஜாலியாக எல்லாரும் வீடு திரும்பினார்கள். ''டேய், டேய்! சுண்டு குண்டு!'' என்று யாரோ கூச்சல் போடும் சத்தம் கேட்டது. எங்கிருந்து குரல் வருகிறது என்று புரியவில்லை. ''டேய்! நம்ம சீமாத் தாத்தாவோட குரல்தான். 'குரல் கம்மியிருக்கோல்லியோ! ரொம்ப நாழியாகக் கத்திண்டிருக்கிறார் போலிருக்கு. தொண்டை வறண்டு போயிருக்கிறது. குரல் வரும் திக்கைப் பார்த்தால் ஆகாயத்திலிருந்து வராப்பலே இருக்கே!'' என்று சுண்டுவும் குண்டுவும் பேசிக்கொண்டார்கள். ''கண்டு பிடிச்சுட்டேன். அதோ உங்க வீட்டின் பின் பக்கத்து ஓட்டு மேலே நின்றுகொண்டு கத்துகிறார் சேவல் மாதிரி'' என்றான் ரகு. எல்லாரும் தோட்டப் பக்கம் ஓடினார்கள். சுண்டு கேட்டான்: ''தாத்தா, வீட்டில் இவ்வளவு இடம் இருக்கும்போது ஓட்டு மேலே ஏறி நின்னுண்டு ஏன் இப்படிக் கத்தறேள்?''

''உதை பிச்சுப்பிடுவேன்! என்ன அயோக்கியத்தனம்? அடுத்த வீட்டுக்காரர்களுடைய ஏணியைக் கேட்காமல் கொண்டு வந்து மேலே ஏறி ஓட்டை ரிப்பேர் செய்கிறேனாம். அதற்காக நான் மேலே ஏறியவுடன் ஏணியை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். மூணு மணி நேரமாக நான் படைபதைக்கிற வெய்யிலில் கதறிண்டிருக்கேன். அந்த அடுத்த வீட்டு மாமி இலேசில்லை. நான் கத்துவதைக் கேட்டும் காதில் விழாத மாதிரி சிரிச்சு மாஞ்சு போகிறாள்'' என்று தாத்தா கத்தினார். ஏணியை மறுபடியும் ரகு கொண்டு வந்தான். தாத்தாவைக் கீழே இறக்கினார்கள். தாத்தாவின் கோபம் பக்கத்து வீட்டுக்காரர் மீதுதான். தங்கள் பேரன்கள் எங்கே போனார்கள் என்றே கேட்கவில்லை. ''உங்களைவேறு வீட்டில் வைத்துப் பூட்டிவிட்டேன். பாவம், எப்படித்தான் வெளியே வந்து என்னைக் காப்பாற்றினீர்களோ?'' என்று சுண்டுவையும் குண்டுவையும் தடவிக் கொடுத்தார் தாத்தா. ''அடுத்த வீட்டு ரகுவையும் தடவிக் கொடுங்கோ. உங்களைக் காப்பாற்றும் படலத்தில் முன் நின்றவன் அவன்தான்'' என்றார்கள் சுண்டுவும் குண்டுவும்.


வீராதி வீரன்
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
மெள்ள டாக்டர். நான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். அப்படியே உள்ளே குதியுங்கள். நல்ல வேளை, மூவரும் தப்பி விட்டோம்.
5
பாரத வீரரே! சங்கோஜப் படாமல் என் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு தடியின் உதவியால் மெள்ள நடவுங்கள்.
டாக்டர் ஸார், அதிர்ஷ்டம் நம் பக்கம். வீதியில் யாருமில்லை.
ரஹீம் தன் இரு விரல்களை வாயில் வைத்து 'விஸ்' என்று சீழ்க்கை அடித்தான். அவன் தோழனின் கழுதைக்கு அதன் பொருள் தெரியும்.
கழுதை பாய்ந்தோடுவதைக் கண்டதும் பீப்பாய்க்குள் ஒளிந்திருந்த பாகிஸ்தானி வீரனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை...
நான் கழுதையைத் தொடர்ந்து ஓடுவதா அல்லது கட்டளைப்படி இதனுள்ளிருந்து வீட்டைக் கண்காணிப்பதா? ம்.. அதுதான் சரி. இதனுள்ளே இருப்போம்.
தோழரே, நீங்கள் அதிகம் நடக்கக் கூடாது. ஆகவே இந்தக் கழுதையின் மீது ஏறி வாருங்கள்.
முக்தி வாஹினியின் படகு கடற்கரையில் உள்ளது. அதில் இவரை ஏற்றி அனுப்பிவிடலாம் டாக்டர்...
அதோ அந்தப் படகுதான். பாரத வீரரே, அவர்கள் உம்மைப் பத்திரமான இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள்.
நல்லது நண்பர்களே, என் காலிரண்டும் ஆறியதும் நான் மறுபடி உங்களுக்கு உதவ இங்கு வருவேன்.



சமிக்ஞை செய்து படகைக் கரையோரம் கொண்டு வரச் சொன்னான் ரஹீம்.
தம்பி, நானும் இவரோடு போகிறேன். இங்கிருந்தால் அந்தப் பாகிஸ்தானியர் என்னை உயிரோடு விட்டு வைக்க மாட்டார்கள். நீயும் கூட இந்தப் படகில் வரலாமே. வாப்பா..
நான் வரவில்லை டாக்டர். இது என் தாயகம். இதை விட்டு நான் வெளியேற மாட்டேன். என் நாடும் மக்களும் விடுதலை பெற உதவுவேன். நீங்கள் போய் வாருங்கள்.
படகு கடலில் கொஞ்ச தூரம் தான் போயிருக்கும். மேகங்களிடையே இருந்து ஒரு விமானம் திடீரென்று படகை உராய்ந்தாற் போலத் தாழப் பறந்து வந்தது.....
இது போர் விமானமில்லை. தனிப்பட்டவர்களின் விமானம். ஏதோ நேர்ந்திருக்க வேண்டும். அதுதான் இப்படி..
ஆனால் விமானிக்கு ஏதும் நேரவில்லை. விமானத்துக்குத்தான் கோளாறு. பாகிஸ்தான் கப்பல் படை பீரங்கிகள் அதை மோசமாகத் துளைத்திருந்தன. விமானத்தின் 'கன்ட்ரோல்' சரியாக வேலை செய்யவில்லை. விமானம் பறந்து கொண்டிருக்க மட்டுமே விமானியால் செய்ய முடிந்தது. மர உச்சிகள், பாகிஸ்தான் ராணுவ வண்டிகள் இவைகளை யெல்லாம் தொட்ட படி வானத்தில் வட்ட மடித்துக் கொண்டிருந்தார் அந்த விமானி, தரையில் இறங்கத் தக்க இடம் தேடி..


இதோ ஒரு பாதை... விமானத்தை
இங்கு இறக்குவதைத் தவிர
வேறு மார்க்கமில்லை.
அந்தப் பாதையில்தான் ரஹீம் போய்க் கொண்டிருந்
தான். விமானம் தூரத்திலேயே பாதை ஓரத்துக்குத்
தாவிக் குதித்துத் தப்பினான்...
தம்பி! ரொம்ப
பயந்து விட்டாயா?
ஒரு கை கொடு.
நான் கீழே இறங்
குகிறேன்.
நீ முக்தி வாஹினியா?
ஜெய் பங்களாதேஷ்!
இந்த விமானத்தை
நாம் மறைத்து விட வேண்
டும். வழியில் ஒரு டிரக்
நிறையப் பாகிஸ்தா
னிய வீரர்கள் வரு
வதைக் கண்டேன். அவர்
கள் என்னைத் தேடி
வருவார்கள்.
நீங்கள் பாரத
தேசத்தவரல்லவா?
என் உதவி உங்க-
ளுக்கு உண்டு.
பாரத விமானி, விமானத்தின் இறக்
கைகளை மடிக்க, ரஹீம் அதை
இழுத்துச் செல்ல ஒரு வழி செய்தான்.
மணற் பாங்கான பூமியல்லவா.
விமானத்தை உருட்டுவது சிரமம்
தான். இருந்தாலும் தள்ளுங்கள்.
என் கழுதை நம்மை விடப்
பலசாலி. இழுத்துப் போய் மறை
விடத்தில் சேர்த்து விடுவான்.
நல்ல வேலை!
கொஞ்சம் தாமதித்
திருந்தாலும் பாகிஸ்
தானியர்களிடம்
சிக்கிக் கொண்டிருப்
போம். இனி நம்மைக்
கண்டு பிடிக்க
அவர்களால்
முடியாது.



"கா ந்தம் பிறந்த கதைதான் எங்களுக்குத் தெரியாது. ஆனால் காந்தத்தைப் பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியுமே!'' என்று சொல்லிக் கொண்டு கையில் 'கோகுலம்' இதழுடன் வந்தனர் சில பையன்கள்.

''காந்தத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் சொல்லுங்கள், பார்க்கலாம்'' என்றார் வி. கே.

குட்டிகையான ஒரு பையன் மடமடவென்று சொல்ல ஆரம்பித்தான். ''இரும்புத் தாதுப் பொருள்கள் சிலவற்றில் காந்த சக்தி இயற்கையாகவே அமைந்திருக்கும். இதற்கு இயற்கைக் காந்தம் என்று பெயர். செயற்கை முறையிலும் காந்தத்தைத் தயாரிக்கலாம். அப்படித் தயாரிக்கப்பட்ட காந்தங்களைத்தான் பள்ளிக்கூடத்துச் சோதனைச் சாலைகளில் குதிரை லாட வடிவில் 'U' வைத்திருக்கிறார்கள்.''

''ஏன், தட்டையான இரும்புப் பட்டை வடிவிலும்கூடக் காந்த இரும்பு இருக்கிறதே!'' என்றான் இன்னொரு பையன்.

''குதிரை லாட வடிவிலுள்ள காந்தத்தில் இரும்புப் பொருட்கள் வந்து ஒட்டிக்கொள்ளுகிறதில்லையா? இந்த முனைகளுக்கு என்ன பெயர் என்று தெரியுமா?'' என்று கேட்டார் விகே.

''தெரியுமே! துருவங்கள் (போல்கள்) என்று பெயர்'' என்றன பல குரல்கள்.

''காந்த இரும்பின் இரு முனைகளிலும் ஒட்டிக் கொள்ளுவதைப் போல் இரும்புத் தூள் அதன் நடு மையத்திலும் ஒட்டிக் கொள்ளுமா?'' என்று கேட்டார் விகே. வந்திருந்த பையன்கள் பதில் சொல்ல முடியாமல் சற்றுத் தயங்கினார்கள். விகே தொடர்ந்தார்: ''காந்த இரும்பின் மையப் பகுதியில் ஆகர்ஷண சக்தி கிடையாது. அது சரி, இதோ என்னிடம் இரண்டு காந்த இரும்புகள் இருக்கின்றன. ஒன்று பெரியது, மற்றது சிறியது. இவ்விரண்டில் காந்த சக்தி எதில் அதிகமாக இருக்கும் என்று சொல்ல முடியுமா உங்களால்?''

''பெரிய காந்த இரும்புத் துண்டில்தான். இதிலென்ன சந்தேகம்?'' என்று பதிலளித்தார்கள் குழந்தைகள். விகே பதில் சொல்லவில்லை. மேஜை மீது சில பேப்பர் கிளிப்புகளை அள்ளிப் போட்டார். பெரிய காந்த இரும்புத் துண்டை அருகே கொண்டு போனார். பேப்பர் கிளிப்புகள் ஓடிவந்து ஒட்டிக்கொண்டு தொங்கின. அதை அருகிலிருந்த ஒரு பையனிடம் நீட்டி, ''மொத்தம் எத்தனை கிளிப்புகளை இந்தக் காந்தம் ஆகர்ஷித்திருக்கிறது என்று எண்ணிப் பார்'' என்றார். பையன் எண்ணினான். பதினைந்து இருந்தன. உடனே சிறிய காந்த இரும்புத் துண்டை அந்தக் கிளிப்புகளின் அருகே கொண்டு போனார். அதிலும் வந்து கிளிப்புகள் ஒட்டிக் கொண்டன. அதிலுள்ளவற்றையும் எண்ணச் சொன்னார். அதே பதினைந்துதான்! ''அதிசயமாக இருக்கிறதே'' என்றான் பையன்.

''இப்போது தெரிகிறதா? சிறிய காந்த இரும்பு ஆகர்ஷித்த அதே அளவு கிளிப்புகளைத்தான் பெரிய காந்த இரும்பும் தன்னிடம் சர்த்துக் கொண்டிருக்கிறது. இதே போலப் பல்வேறு அமைப்புக்களில் உள்ள சிறிய பெரிய காந்தங்களைக் கொண்டு சோதித்துப் பார்த்தாயானால் உங்களுக்கு ஓர் உண்மை விளங்கும். காந்த சக்தி அதன் அளவினாலோ அமைப்பினாலோ வித்தியாசப்படுவதில்லை. ஆனால்..'' என்று நிறுத்தினார்.


''ஆனால்... என்றால் ஏதோ வேறு காரணம் இருக்கும் போலிருக்கிறதே'' என்றார்கள் குழந்தைகள்.

காந்தத்தின் சக்தி அதன் வயதிலும் அதைப் பேணிக் காக்கப்படும் முறையிலும் மட்டுமே மாறுபடுகிறது. நாள்பட்ட காந்த இரும்புகளில் சக்தி குன்றியிருக்கும். காந்த இரும்பைச் சம்மட்டி கொண்டு அடித்தாலோ அல்லது காய்ச்சினாலோ அப்போதும் அதிலுள்ள சக்தி குன்றிப் போகும்'' என்று விளக்கினார் விகே.

''அது சரி, காந்தத்தில் இரும்புத் துகள்கள் வந்து ஒட்டிக் கொள்கின்றன. ஒரு காந்தம் மற்றொரு காந்தத்தைத் தன்னிடம் இழுத்துக் கொள்ளுமா?'' என்று ஒரு புதிய வினாவை வீசினார் விகே.

பையன்கள் புத்திசாலிகளாயிற்றே. டக்கென்று பதில் சொன்னார்கள். ''காந்தத்துக்கு இரு துருவங்கள் உண்டு. ஒரு காந்த





இங்கே செய்யலாம்

ஊசியை நூலில் கட்டித் தொங்கவிட்டால் அதன் ஒரு முனை தென் திசையையும் மறு முனை வட திசையையும் நோக்கியபடியேதான் எப்போதும் நிற்கும்'' — இது ஒரு பையன். உடனே இன்னொரு பையன் ''எங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள காந்த இரும்பில் 'N' என்றும் 'S' என்றும் அதன் துருவங்களைக் குறித்திருக்கிறார்கள்'' என்றான்.

''குதிரை லாட வடிவிலுள்ள இரண்டு காந்தங்களை எடுத்துக் கொள். ஒன்றை மேஜையின் மீது வை. மற்றொரு குதிரை லாட வடிவ காந்தத்தை எடுத்து அதிலுள்ள 'S' முனையை மேஜையின் மீதுள்ள 'S' முனையை நோக்கி நகர்த்திப்பார். என்ன விளைவு ஏற்படும் தெரியுமா?'' என்று கேட்டார் விகே.

''ஒன்றை ஒன்று ஆகர்ஷித்துக் கொள்ளாது. தூர விலகிப் போகும். ஒரு காந்தத்தின் 'S' துருவம் மற்றொரு காந்தத்தின் 'N' துருவத்தை இழுத்துக் கொள்ளும்'' என்றனர், குழந்தைகள்.

''அதாவது ஒரே மாதிரியான துருவங்கள் ஒன்றையொன்று விரும்புவதில்லை. மாறுபட்ட துருவங்கள் ஒன்றை ஒன்று ஆகர்ஷித்துக் கொள்ளுகின்றன. அப்படித்தானே ?'' என்று கேட்டார் விகே.

''ஆமாம். அதுவேதான்'' என்றார்கள் பையன்கள்.

''காந்தத்தின் தத்துவமே 'அதுதான்' என்ற விகே வளையம் போன்ற ஓர் இரும்புத் துண்டை அவர்களிடம் காட்டினார். ''பட்டை காந்தம், குதிரை லாட காந்தம் இவற்றையெல்லாம் பார்த்திருக்கிறீர்கள். அதிலெல்லாம் இரு முனைகள் இருக்கின்றன. காந்தம் என்றால் இப்படி இரு முனைகளோடு கூடிய வடிவத்தில் தான் இருக்குமா? இருக்க வேண்டுமா? இதோ இந்த இரும்பு வளையத்தில் காந்த சக்தி இருக்கிறது. ஆனால் இதற்குத் துருவங்கள் உண்டா?'' என்று கேட்டார்.

குழந்தைகள் இப்படியொரு காந்த இரும்பைப் பார்த்ததில்லை. ஆகவே அவர்களால் சட்டென்று பதில் கூற முடியவில்லை. அவர்களின் தவிப்பைப் புரிந்து கொண்ட விகே அந்த வளையத்தை ஒரு நூலில் கட்டி ஊசலாட விட்டார். பிறகு ஒரு பட்டைக் காந்தத்தின் ஒரு முனையை அதன் அருகே கொண்டு போனார். 'டிங்' என்று ஓடிவந்து ஒட்டிக் கொண்டது. அதை விடுவித்துக் கொண்டு வளையத்தில் முதலில் தொட்ட இடத்துக்கு நேர் எதிரே பட்டைக் காந்தத்தின் அதே முனையைக் கொண்டு போனார். வளையக் காந்தம் விலகி ஓடியது. ''என்ன தெரிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டார் விகே.


''வட்ட வடிவமான காந்தத்துக்கும் துருவம் உண்டு என்று தெரிந்து கொண்டோம்'' என்றார்கள் பையன்கள்.


''சார்! எங்களால் காந்த இரும்பைத் தயாரிக்க முடியுமா?'' என்று கேட்டான் ஒரு பையன்.

''முடியுமே!'' என்றார் விகே. ''உன்னிடம் புத்தகம் தைக்கும் பெரிய எஃகு ஊசி இருக்கிறதில்லையா ? அதில் இப்போது காந்த சக்தி இருக்காது. அதில் காந்த சக்தி உண்டாக்கித் தருகிறேன், பார்'' என்று கூறியவர் அந்தப் பையனிடமிருந்த பெரிய ஊசியை வாங்கி உள்ளங்கையில் வைத்துக் கொண்டார். பிறகு பட்டைக் காந்தத்தின் ஒரு முனையால் ஊசியின் ஒரு முனையிலிருந்து அதன் மீதாக அழுத்தித் தேய்த்தபடி மறுமுனைக்குக் கொண்டு போனார். ''இங்கு தான் நீங்கள் கவனிக்க வேண்டும். இப்படி மறுமுனைக்குப் பட்டை காந்தத்தைக் கொண்டு வந்ததும் ஞாபகமாகக் காந்த இரும்புத் துண்டை மேலாகத் தூக்கி விடவேண்டும். வந்த வழியிலேயே மறுபடியும் எதிர்த் திசையில் காந்த இரும்பினால் ஊசி மீது தேய்க்கக் கூடாது. இப்படி ஒரு வழிப் பாதையாக ஊசி மீது ஐம்பதிலிருந்து எண்பது தடவைகள் ஒரே திசையில் மட்டும் காந்தத்தின் ஒரே துருவத்தால் மட்டும் அழுத்தித் தேய்த்தபின் இந்த ஊசியைச் சோதித்துப் பார்'' என்றார் விகே. அப்படியே ஊசியில் காந்தத்தை ஏற்றி அதை அந்தப் பையனிடம் கொடுத்தார். பையன் அதைக் குண்டூசியின் அருகே கொண்டு போனதும் பெரிய ஊசியில் குண்டூசி வந்து ஒட்டிக் கொண்டது.

''உன் புத்தகம் தைக்கும் ஊசி இப்போது காந்த ஊசியாகிவிட்டது. இதைக் கொண்டு நீ திசை காட்டும் கருவிகூடச் செய்யலாம்'' என்று கூறி அதை ஒரு கார்க்கின் மீது மையமாகப் படுக்க வைத்து அந்தக் கார்க்கை வாயகன்ற ஒரு பாத்திரத்து நீரில் மிதக்க விட்டார். கார்க் சுழன்று தெற்கு வடக்காக நின்றது.

''சார்! எங்களுக்கு மின்சாரக் காந்தங்களைப் பற்றித்தான் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றான் ஒரு பையன். '' அது அப்படியொன்றும் கஷ்டமில்லையே. நீயே கூட மின்காந்தத்தை உருவாக்கலாமே. உன்னிடம் புதிய பாட்டரி செல் இருக்கிறதா? அதைக்





கொண்டு வா. இரண்டங்குல இரும்பாலான போல்ட் ஆணி இருக்கிறதா? எஃகினாலான ஆணி கூடாது. அது மின்காந்தமாக இயங்காது. இதோ பார்த்தீர்களா? இது நூல் சுற்றிய தாமிர ஒயர் மின்சாரக் கடைகளில் கிடைக்கும். இதில் ஒரு ஆறு கெஜம்.

''இந்த போல்ட் ஆணியின் தண்டுப் பக்கத்தில் காகிதத்தை இறுக்கமாகச் சுற்றி ஒட்டிக் கொள். தலைப் பக்கத்திலிருந்து நூல் சுற்றிய தாமிர ஒயரை ஆணியின் தண்டுப் பக்கத்தில் காகிதத்தின் மேலாக நெருக்கமாகச் சுற்றிக் கொண்டு வா.... இரு. இரு. ஆரம்பத்தில் ஓர் அடி நீளத்துக்கு ஒயரை விட்டு விட்டுச் சுற்ற ஆரம்பி. இது பாட்டரியோடு இணைக்கப் பயன்படும். போல்டின் அடி முனைவரையில் சுற்றியானதும் தலைப்பாகத்தை நோக்கி மறுபடியும் முதலில் சுற்றியதின் மேலாகவே சுற்றிக்கொண்டு வா. மூன்றுவது சுற்றுக்கும் கூட ஒயர் காணும். கடைசியில் ஓர் அடி ஒயர் மீதம் வைத்து மற்றதையெல்லாம் போல்டில் சுற்றிவிடு. ஆரம்பத்தில் ஓர் அடி, முடிவில் ஓர் அடி ஒயர் இருக்கிறதில்லையா? போல்ட்டில் சுற்றிய ஒயர் தளர்ந்துபோகாதபடி இரண்டு ஒயர்களையும் சேர்த்துத் திரித்து முறுக்கிக் கொள்.

''இனி இரு முனை ஒயர்களிலும் சுற்றியுள்ள நூலைப் பின்னுக்குத் தள்ளினால் உள்ளே தாமிரக் கம்பி பளபளக்கிறதில்லையா? உதிரியாக விரியும் இந்தத் தாமிரக் கம்பிகளை முறுக்கித் திரித்துக் கொள். அந்தப் பாட்டரி செல்லைக் கொண்டா'' என்று அதை வாங்கிய விகே ஒயரின் ஒரு முனையைச் செல்லின் கீழேயும் மறுமுனையைச் செல்லின் மேலாக உள்ள பித்தளைக் குமிழிலும் வைத்து அழுத்திக் கொண்டே ''எங்கே இப்போது அந்த ஆணியைக் குண்டூசிகளின் அருகே கொண்டு போங்கள், பார்க்கலாம்'' என்றார். அப்படியே பையன்கள் செய்தார்கள். ''அடே!'' என்ற வியப்பொலி அவர்களிடமிருந்து வெளிப்பட்டது. ''சார், போல்ட் ஆணியில் காந்த சக்தி ஏற்பட்டிருக்கிறது'' என்றார்கள். பாட்டரியின் மேல் பகுதியில் உள்ள ஒயரை விகே தூக்கினார். போல்ட் ஆணியில் ஒட்டிக் கொண்டிருந்தவை பொத்தென்று கீழே விழுந்தன. பையன்களின் வியப்பு அதிகமாகியது.

''நான் ஒயரைத் தூக்கும்போது ஒயரில் மின் ஓட்டம் துண்டிக்கப்பட்டு விட்டது. ஆகவே போல்ட்டில் மின்காந்தமும் பாயவில்லை. ஒயரில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும் போதுதான் போல்ட்டில் காந்தம் ஏற்படுகிறது மின் காந்தங்களின் தத்துவமே இதுதான்.''

''மின்காந்தத்துக்குத் துருவமுண்டா?''

''சரியான கேள்வி. இதோ நான் பாட்டரியில் ஒயர்களை இணைத்து போல்ட்டில் காந்தம் உண்டாக்குகிறேன். நீ இந்தப் பட்டை இரும்புக் காந்தத்தின் ஒரு முனையை மின் காந்தப் போல்ட்டின் அருகே கொண்டுவா. என்றார் விகே. பையன் கொண்டுவந்தான். பட்டைக் காந்தத்தை மின்காந்தம் ஆகர்ஷிக்கவில்லை. ''சரி. போல்ட்டின் மறுமுனையில் அதைக் காட்டு'' என்றார். பையன் மறுமுனையின் அருகே பட்டை இரும்புக் காந்தத்தைக் கொண்டு போனான். 'டிங்' என்று இரண்டும் ஒட்டிக் கொண்டன.

''இதிலிருந்து தெரிந்துகொண்டதென்ன?''

''மின்காந்தத்துக்கும் துருவங்கள் உண்டு'' என்றனர் பையன்கள்.

''அதுமட்டுமல்ல. மின் காந்தங்களின் துருவங்களை மாற்றி அமைக்கவும் முடியும்.''

''அது எப்படி சார்?''

''இப்போது நான் பாட்டரியில் ஒயர்களை இணைத்துள்ள நிலையில் மின்காந்தத்தில் எந்த முனை வடக்கு எது தெற்கு என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொண்டீர்கள் இல்லையா? இதோ இப்போது பாருங்கள்'' என்று கூறிப் பாட்டரியில் இணைத்துள்ள மேலுள்ள ஒயரைக் கீழேயும் கீழுள்ள ஒயரை மேலாகவும் மாற்றி அமைத்தார். ''எங்கே இப்போது இந்த மின்காந்த போல்ட்டின் அருகே பட்டை இரும்பின் ஒரு துருவத்தைக் கொண்டு வாருங்கள். முன்பு எந்த முனை எந்தத் துருவமென்பதைக் குறித்துக் கொண்டீர்களில்லையா?'' என்றார் விகே. பையன்கள் பட்டை இரும்புக் காந்தத் துண்டைக் கொண்டு போய்ச் சோதித்தார்கள். அவர்கள் முகத்தின் வியப்புப் பரவியது.

''சார்! மின்இணைப்புக் கம்பிகளை மாற்றி இணைத்த பிறகு முன்பு இருந்த 'N' 'S' துருவங்கள் இப்போது 'S' 'N' துருவங்களாக மாறிவிட்டன'' என்றார்கள்.

''ஆகவே...'' என்று தொடங்கினார் விகே. பையன்கள் முடித்தார்கள். ''மின்காந்தங்களின் துருவங்கள் மாறக் கூடியவை என்பது உறுதியாகின்றன.''

''பலே, பலே!'' என்ற பாராட்டுப் பிறந்தது விகேயிடமிருந்து. ''அதுமட்டுமல்ல. மின் காந்தங்களை அதிக சக்தி வாய்ந்ததாகவும் செய்ய முடியும்'' என்றார் விகே பிறகு. ''முன் சோதனைப்படி ஒரு பாட்டரியில் இணைத்த போல்ட் ஆணி எத்தனை பேப்பர் கிளிப்புகளை ஆகர்ஷித்தது என்பதைக் குறித்துக் கொண்டிருக்கிறாய், இல்லையா? இதோ பார்'' என்று கூறி இரண்டு டிரை பாட்டரி செல்களை ஒன்றன் மீதொன்றாக வைத்தார். மேல் பாட்டரியின் பித்தளைக் குமிழ் மீது போல்ட் ஆணியை இணைக்கும் ஒயரின் ஒரு முனையையும் கீழ் பாட்டரியின் அடியில் ஒயரின் இன்னொரு முனையையும் இணைத்து ஆணியில் மின்காந்தம் ஏற்படச் செய்தார்.

''இப்போது அந்தப் போல்ட் ஆணி எத்தனை பேப்பர் கிளிப்புகளை ஆகர்ஷிக்கிறது பார்'' என்றார். பையன்கள் சோதித்தார்கள். ஒரு பாட்டரியினால் போல்ட் ஆணியில் மின் காந்தம் ஏற்பட்டபோது அது ஆகர்ஷித்த கிளிப்புகளைவிட இப்போது இரு பாட்டரிகளினால் மின்காந்தம் உண்டாகியிருக்கும் போது அதிகமான கிளிப்புகளை ஆகர்ஷித்தது போல்ட் ஆணி. பையன்களுக்கு வியப்பான வியப்பு. ''ஆகவே மின்காந்தங்களை அதிகச் சக்தி வாய்ந்தவைகளாகச் செய்ய முடியும் என்பது உறுதியாகிறது இல்லையா?'' என்று கேட்டார் விகே.

''ஆமாம் ஸார். காந்தங்களைப் பற்றி எங்களுக்குப் பல புதிய செய்திகளை இன்று சொல்லிக் கொடுத்தீர்கள். ரொம்ப நன்றி!'' என்று 'விகே'யிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள் பையன்கள்.

மூளைக்கு வேலை

பிரபாகரைக் கூப்பிட்ட சுந்தரம் அவனிடம் "எண்பத்தைந்தை எண்பத்தைந்தால் பெருக்கி, உடனே பதில் சொல்!" என்று கேட்டான். சுந்தர் அவசரம் அவசரமாகப் பெருக்கி விடை சொன்னான்; அவன் சொன்ன விடை தப்பு. பிரபாகர் அவனுக்குச் சுலப முறையை விளக்கிச் சொன்னான்.

85×85 முதல் 8ஐ அடுத்த 8டுடன் 1ஐக் கூட்டிப் பெருக்கு: $8\times(8+1)=72$. அதன் பிறகு 5ஐ 5ஆல் பெருக்கி விடையை அதன் பக்கத்திலேயே இப்படிப் போடு: 7225. இதுவே 85×85ன் பெருக்குத் தொகை என்றான்.

வியப்படைந்த சுந்தர் தன் திருப்திக்கு 65ஐ 65ஆல் பிரபாகர் சொன்ன வழியில் பெருக்கினான்.

$6\times(6+1)=42$, $5\times5=25$: 4225. இதே போல் 55, 45, 95 எல்லாவற்றையும் சுலபமாகப் பெருக்கி விடை கண்டான் சுந்தர். சரியான விடை நொடியில் வந்து விடவே, "அடுத்தபடி ஏதாவது சொல்லுடா பிரபாகர்!" என்று நச்சரித்தான்.

"57ஐ 57ஆல் பெருக்கிச் சொல்ல வேண்டுமானால் எப்படிப் போட வேண்டும் தெரியுமா? முதல் 5ஐ அடுத்த 5ஆல் பெருக்கி அத்துடன் 7ஐக் கூட்டிக்கொள். $5\times5+7=32$. அடுத்தபடி 7ஐ 7ஆல் பெருக்கினால் 49 வருகிறதில்லையா? இந்த விடைகளை அடுத்தடுத்து இப்படிப் போடு: 3249. இதுதான் பெருக்குத் தொகை" என்று விளக்கினான் பிரபாகர்.


"டேய், பிரபாகர், நீ பெரிய 'கம்ப்யூட்டர்' மூளைக்காரன் தாண்டா" என்றான் சுந்தர்.


ஆகவே நீங்களும் 5ல் முடியும் இரண்டு, மூன்று ஸ்தான எண்களை 5ல் முடியும் எண்களால் பெருக்க 'பிரபாகர்' கூறிய வழிகளைப் பின்பற்றலாம். அதேபோல் 5ல் ஆரம்பமாகும் இரட்டை ஸ்தான எண்களை அதே எண்ணால் பெருக்கவும் பிரபாகர் சுலப வழியைச் சொல்லி விட்டான்! முயன்று பாருங்கள்.

(1) 65×65, 45×45, 145×145 165×165.

(2) 56×56, 59×59.


"பிரகஸ்பதி"





☐ மேலே இரண்டு படங்கள் ஒரே மாதிரி இருக்கின்றன. ஆனால் மேல் படத்துக்கும் கீழ்ப் படத்துக்கும் எட்டு அம்சங்களில் வித்தியாசம் இருக்கின்றன. அவை என்னென்ன என்பதை உங்களால் அறிய முடிகிறதா, பாருங்கள்.

☐ இதோ இந்தப் படத்தில் சில விளையாட்டுப் பொருள்கள் குவிந்து கிடக்கின்றன. என்ன என்ன விளையாட்டுக்கான உபகரணங்கள் இங்குள்ளன என்பதை வரிசைப்படுத்துங்கள், மொத்தம் 13 விளையாட்டுப் பொருள்கள் இருக்கின்றன.



கதை கதையாம்...



வாண்டு மாமா

வாசுவும் பாமினியும் இணைபிரியாத தோழர்கள். இருவரும் ஒரே வகுப்பில் படித்தார்கள். வாசு கணக்கில் நூறு மார்க் வாங்கினால், பாமினி தமிழில் நூறு மார்க் வாங்குவாள். அவன், தமிழில் அவளுக்கு அடுத்தபடி. அதேபோல் அவள், கணக்கில் அவனுக்கு அடுத்தபடி. இப்படி இருவரும் படிப்பில் போட்டி போட்டுக் கொண்டு படித்ததைப் போலவே விளையாட்டிலும் விஷமத்திலும்கூடப் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறினார்கள்.

அன்று பள்ளியில் காலை வகுப்புகள் முடிந்து பகல் சாப்பாட்டுக்கு இடைவேளை. வாசுவும் பாமினியும் தங்கள் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு ஓடி விளையாடினார்கள், காலியான வகுப்புகளில் புகுந்து. மத்தியானம் முதல் பீரியட் கைவேலை. அவர்களுக்குப் பிடித்தமான வகுப்பு அது. கத்திரிக்கோலும், சுத்தியலும், ஆணியும், காகிதமும் அவர்கள் கையில் இயங்கி விதவிதமான பொருள்களாக உருப்பெறும். கைவேலையில் கைதேர்ந்தவர்களாயிற்றே இருவரும். கைவேலை வகுப்பு நடத்தும் ஆசிரியை சாந்தா கண்டிப்புக்குப் பெயர் பெற்றவர். ஆனால் வாசுவும் பாமினியுமோ சாந்தாவின் 'பெட்!' புத்திசாலிக் குழந்தைகளை யார்தான் விரும்ப மாட்டார்கள்?

வகுப்பு நடத்தத் தேவையான பொருள்களைச் சாந்தா தன் இரு கைகள் நிறைய அடுக்கிக் கொண்டு வந்தாள். சாக்பீஸ் அடங்கிய முழுப் பெட்டி, தச்சு வேலைக்கான ஆணிகள், சின்ன ரம்பம்; சுத்தியல் தவிர சில புத்தகங்கள் இத்தனையுடன் மாடிப் படிகளில் மெதுவாக ஏறி வந்து கொண்டிருந்தார் சாந்தா டீச்சர். அந்தச் சமயம் பார்த்துத் தானா வாசு அப்படித் தடதடவென்று கீழே ஓடி வர வேண்டும்? பாமினியின் விரல் நுனி அவன் மீது பட்டுவிட்டால் 'அவுட்' ஆகிவிட வேண்டியிருக்குமே என்ற பரபரப்பு! அவ்வளவுதான், வாசு சாந்தா டீச்சர் மீது மோதிக் கொள்ள, டீச்சர் கையில் இருந்த பொருள்கள் அத்தனையும் கீழே விழுந்து சிதறி ஓடலாயின. டீச்சரும் நிலைதடுமாறி மாடிப் படிக் கைப்பிடியின் மீது சரிந்து சாய்ந்து விட்டார். 'இதோ நீ அவுட்' என்று கூவியபடி ஓடி வந்த பாமினி வாசுவின் மீது மோதிக்கொள்ள...ஒரே களேபரம்!

பாவம் வாசு, தவித்துப் போய்விட்டான், இப்படி ஆயிற்றே என்று! சாந்தா டீச்சரின் முகத்தைப் பார்க்கவே இருவருக்கும் நடுக்கமாக இருந்தது. இருவரும் பரபரப்புடன் சிதறிக் கிடந்த பொருள்களைப் பொறுக்கி ஒன்று சேர்க்கலானார்கள்.

''இன்று உங்கள் இருவருக்கும் சரியான பூசை கொடுக்கிறேன், வாருங்கள் வகுப்புக்கு'' என்று முகம் சிவக்கக் கூறினார் சாந்தா டீச்சர். ''உங்களுக்கு இன்று ஒரு கைவேலையும் தரப்போவதில்லை. அதற்குப் பதிலாக...'' என்று ஏதோ சொல்ல வந்த டீச்சரின் வார்த்தையை மறித்து வாசு பேசினான்.

''டீச்சர், டீச்சர்... ப்ளீஸ்! நாங்க வேணுமின்னே இப்படிச் செய்யலே, அது உங்களுக்கே தெரியும். நீங்க எங்களுக்குத் தண்டனை கொடுக்கறதுக்கு முன்னாடி நான் ஒரு கதை சொல்றேன். அதைக் கேட்டப்புறம் நீங்க என்ன தண்டனை கொடுத்தாலும் சரி'' என்றான்.


சாந்தா டீச்சர் கண்டிப்பானவர் என்றாலும் ரொம்ப நல்லவங்க. ''சரி சொல்லு, கேக்கறேன்!'' என்று மாடிப் படிகளில் அப்படியே உட்கார்ந்துகொண்டார். மணி அடிக்க நேரமிருந்தது. பாமினி ஆணிகளையும் உடைந்த சாக்கட்டிகளையும் சேகரித்துக் கொண்டிருந்

தான். வாசு கதை சொல்ல ஆரம்பித்தான். கதை சுவாரசியமான கட்டத்தை அடையும் போதெல்லாம் பாமினி சாக்பீஸை ஆணிப் பெட்டியிலும் ஆணிகளைச் சாக்பீஸ் பாக்ஸிலுமாகப் போடலானாள், தன்னை மறந்து.

வாசு குரலைக் கனைத்துக் கொண்டு கதை சொல்லலானான்: என் வீட்டில் நான் ஒரு பூனை வளர்க்கிறேன். அது மட்டுமல்ல. பல விதமான வர்ணங்களைக் கொண்ட சின்னச் சின்னப் பறவைகளையும் கூடக் கூண்டில் வைத்து வளர்க்கிறேன். அவை தாவித் தாவி வாலை ஆட்டும். 'க்விச்... க்விச்' என்று ஓசை எழுப்பும். ஒரு நாள் பறவைகளுக்கு உணவு போட்டுவிட்டு அதன் கதவை மூட மறந்து விட்டேன்போல் இருக்கிறது. மஞ்சள் வண்ணச் சின்னப் பறவை யொன்று கூண்டிலிருந்து வந்துவிட்டது. வெளியே ஓடிவிடவில்லை. என் அறைக்குள்ளேயே 'க்விச் க்விச்' என்று கூவியபடி வாலை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டு தாவித் தாவி உட்



கார்ந்து விளையாடிக் கொண்டிருந்திருக்கிறது. இது என் பூனையின் கண்ணில் பட்டுவிட்டது. அதன் நாக்கில் நீர் சுரக்காமல் இருக்குமா? ஒரே பாய்ச்சலில் அதன் மீது தாவி அதைத் தன் முன்னங்கால்களால் அமுக்கிக் கொண்டு..அந்தச் சமயத்தில் நான் வந்து விட்டேன். நல்ல வேளை! ஒரு விநாடி தாமதித்திருந்தாலும் என் மஞ்சள் வண்ணச் சின்னப் பறவையைப் பூனை சப்புக் கொட்டிச் சுவைத்து மகிழ்ந்திருக்கும். பறவையை அதன் பிடியிலிருந்து விடுவித்து அதைத் தடவிக் கொடுத்துக் கூண்டில் விட்டுக் கதவை மூடினேன். பாவம் சின்னப் பறவை 'வீச் வீச் வீச்' என்று கத்தியபடி கூண்டுக்குள் தாவித் தாவிப் பறந்தது. அதன் சின்ன நெஞ்சு எப்படித் தவித்ததோ? பின் இருக்காதா? எத்தனை பெரிய கண்டம்?



எனக்குக் கோபமான கோபம், என் பூனை மீது. ஸ்கேலை எடுத்துக் கொண்டு அதனிடம் ஓடினேன். ''நீ இத்தனை பொல்லாத பூனை என்று தெரிந்திருந்தால் உன்னை இத்தனை செல்லமாக வளர்த்தே இருக்க மாட்டேன். என் அழகுப் பறவையை என்னமாய்ச் சாப்பிடப் பார்த்தாய்! உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று கூறியபடி ஸ்கேலை ஓங்கினேன் அதை அடிக்க. அப்போது ஓர் அதிசயம் நடந்தது. பூனை என்னை ஓரக் கண்ணால் பார்த்தது. பிறகு பேசியது. ''கொஞ்சம் பொறு வாசு. நீ என்னை அடிக்கு முன் நான் உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன். அதைக் கேட்ட பிறகு நீ உன் விருப்பப்படி செய்து கொள்'' என்றது பூனை. எனக்கு வியப்பான வியப்பு. ஓங்கிய கையை—இல்லை ஸ்கேலை அப்படியே தொய்ய விட்டபடி கதையைக் கேட்கத் தயாரானேன். பூனை கதை சொல்லிற்று:

ஒரு நாள் என் உடம்பைச் சுத்தம் செய்து கொண்டிருந்தேன். உனக்குத் தான் தெரியுமே, நான் எப்படி என் உடலைச் சுத்தம் செய்து கொள்ளுவேன் என்று! முதலில் காது, பிறகு முகம், அதன் பிறகு என் மார்பு என்று இப்படி உடலின் ஒவ்வோர் அங்கமாகச் சுத்தம் செய்து கொண்டு வரும்போது ஓர் உண்ணி என் மீது வந்து உட்கார்ந்து தொல்லை கொடுத்தது. அதைப் பிடிக்க முயன்றேன். முடியவில்லை. அதுவும் என்னை விட்டுப் போகவில்லை. உடலை வளைத்து வளைத்து நெளிந்து அதை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று கஜகர்ணம் — இல்லை மார்ஜாலக் கர்ணம் போட்டேன். ம்ஹூம், முடியவே இல்லை. தோள் மீது இருக்கும், அடுத்தபடி மார்பில், முதுகில், பின்னால்.... இப்படியே விரட்டி விரட்டி என் வாலின் முனைக்குக் கொண்டு வந்து விட்டேன், அதை. அங்கு அதற்குப் பதுங்கிக் கொள்ள இனி இடமே கிடையாது. அப்போது நான் அதனிடம் மூச்சு வாங்கச் சொன்னேன், ''பொல்லாத உண்ணியே! இனி நீ தப்ப முடியாது. என்னை நீ கடித்துக் கடித்துத் தொந்தரவு கொடுத்தாயல்லவா? இப்போது உன்னை என் கூரான பல்லினிடையே வைத்துக் கடித்து....'' என்று கூறிச் சீறிய என்னிடம் உண்ணி சொல்லிற்று.

''பூனையாரே, கொஞ்சம் பொறும். நான் உம்மிடம் சிக்கிக் கொண்டுவிட்டேன். உண்மைதான். என்னை நீர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கு முன்னால் நான் ஒரு கதை சொல்லுகிறேன். அதைக் கேட்ட பிறகு உங்கள் விருப்பப்படி நடவுங்கள்'' — என் வாலின் கோடியிலுள்ள மூன்றே மூன்று ரோமங்களின் நுனியில் உட்கார்ந்தபடி பேசியது அந்தப் பொல்லாத உண்ணி! நானும் என் கோபத்தை மறந்து, கதையைக் கேட்க உடலைச் சுருட்டிக் கொண்டு உட்கார்ந்தேன். உண்ணி சொல்ல ஆரம்பித்தது.

“எனக்கு இரண்டு குழந்தைகள். இரண்டும் விஷமக் கொடுக்குகள்! ரொம்ப ரொம்பத் தொல்லை கொடுத்தன, எனக்கு நிம்மதி இல்லாமல். விஷமம் என்றால் சாதாரணமா? பூனையான உங்கள் குழந்தைகளைப் போலவோ, அல்லது மனிதக் குழந்தைகளைப் போலவோ அவை விஷமம் செய்யவில்லை. அதை விவரிக்க என்னால் முடியாது. நீங்கள் உண்ணியாக இருந்தால் தான் அது புரியும். போகட்டும். ஒரு சமயம் அவைகளின் விஷமம் தாங்காத நான் ரொம்பக் கோபத்துடன் அவைகளை அடிக்க விரட்டிக் கொண்டு தாவிய போது அவை கூறின: ''அம்மா, அம்மா, ஆத்திரப்படாதே! கொஞ்சம் பொறுமையாக நாங்கள் சொல்லும்

கதையைக் கேள். அதன் பிறகு நீ எங்களை எத்தனை அடித்தாலும் சரி'' என்றன. ''உங்களுக்குத்தான் படிப்பு வாசனையே கிடையாதே. பள்ளிக்கூடம் போகாத சோம்பேறிகளாயிற்றே, கதை எப்படிச் சொல்ல வரும்?'' என்று கேட்டேன், அவைகளிடம்.

''அதுவா, வழக்கமாக நாங்கள் விஷமம் செய்யக் கிளம்புவோமில்லையா? அப்படி ஒரு நாள் ஒரு பெரிய அறிவாளியைக் கடித்தபோது அவர் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் ரத்தத்தில் அறிவு அதிகம் இருந்ததால் எங்களுக்கும் படிக்கும் திறமை தானாக வந்துவிட்டது. முதியவரான அவர் எங்கள் கடி தாளாமல் கண்ணயர்ந்து விடவே, நாங்கள் அவர் புத்தகத்தைப் பார்த்தோம். அதில் ஒரு கதை இருந்தது. அதைத்தான் நாங்கள் இப்போது உனக்குச் சொல்லப் போகிறோம்'' என்று ஆரம்பித்தன உண்ணிகள்.

''அந்த நாட்டில் வாழ்ந்த மக்கள் வேடிக்கை, விளையாட்டு, பாட்டு, ஆட்டம் எதையும் விரும்பாதவர்களாக இருந்தார்கள். உழைப்பு ஒன்றே அவர்கள் லட்சியம். வெட்டிப் பொழுது கழிப்பதையோ, கேளிக்கை விளையாட்டுக்களையோ விரும்பாதவர்கள். அந்த நாட்டில் வாழ்ந்த குழந்தைகளுக்கு இது தாங்க முடியாத தொல்லையாக இருந்தது. விளையாட்டு இல்லா விட்டால் குழந்தைகளால் எப்படி வாழ முடியும்? ஆகவே, குழந்தைகள் ஒன்று சேர்ந்து ஒரு யுக்தி செய்தார்கள். ஒன்பது செங்கல்லை நெட்டக்குத்தாக நிற்க வைத்தார்கள். ஒரு பந்தைக் கொண்டு செங்கற்களை அடித்து விழச் செய்தார்கள். ஒன்பதாம் பந்து (உங்கள் அப்பா ஆடும் சீட்டாட்டமல்ல!) என்று அதற்குப் பெயர் கொடுத்தார்கள். ஒரே அடியில் யார் அதிக செங்கற்களைச் சாய்க்கிறார்களோ அவர்களே சாம்பியன்! குழந்தைகளின் கும்மாளம் ஊரைக் கலகலப்பாக்கியது. இது உழைப்பாளிகளான பெரியவர்களின் முகத்தில் கடுகடுப்பை உண்டாக்கியது. ஒன்பதாம் பந்தாட்டத்துக்குத் தடை விதித்தார்கள், யாரும் விளையாடக் கூடாதென்று. குழந்தைகள் முகம் வாடியது. என்ன செய்வதென்று கூடி யோசித்தார்கள். அவர்களில் எலி வால் என்றொரு பையன். 'ஒன்பதாம் பந்து தானே விளையாடக் கூடாதுன்னு சொன்னாங்க? நாம்ப பத்தாம் பந்து விளையாடுவோம். பத்துக் கல்லை எடுத்து வையுங்க'' என்றான். குழந்தைகள் கைகொட்டி ஆர்ப்பாட்டமிட்டனர்.

பத்தாம் பந்து ஆட்டம் பலே ஜோராக நடந்தது. கூச்சலும் கும்மாளமும் பெருகியது. பஞ்சாயத்துக் கூடியது. எலி வால் குற்றவாளியாகப் பஞ்சாயத்தார் முன்பு நிறுத்தப்பட்டான்.

''பயலே, ஒன்பதாம் பந்து ஆடக் கூடாதுன்னு நீ பத்தாம் பந்து ஆடறியா? குழந்தைகள் படிக்காமல், உழைத்து வேலை செய்து உருப்படாமல் இப்படி நேரத்தை வீணாக்கக் காரணமாக இருந்த உனக்கு என்ன தண்டனை தரப் போகிறேன், தெரியுமா?'' என்றார் பஞ்சாயத்துத் தலைவர்.

எலி வால் அவருக்கு வணக்கம் தெரிவித்து விட்டு ''பஞ்சாயத்து நீதிபதி அவர்களே! நீங்கள் எனக்குத் தண்டனை தரும் முன் நான் கூறப் போகும் கதை



யைக் கேட்க வேண்டும்'' என்று ஒரு கதை சொல்லலானான்.

''ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே நடந்தது இந்தக் கதை. நாட்டில் சட்டமும் ஒழுங்கும் ஏற்படாத காலம் அது. அந்த நாட்டை ஓர் அரசர் ஆண்டு வந்தார். அந்த நாட்டின் ஒரு கோடியில் வசித்த மக்கள் ரொம்ப மோசமானவர்களாக இருந்தார்கள். ஒருவர் பொருளை மற்றவர் திருடிக் கொண்டார்கள். உழைப்பதில்லை. சதா சண்டையும் சச்சரவும்தான். நிலங்கள்

உழுப்படாமல் வெடித்துக் கிடந்தன. ஆடு மாடுகள் கவனிப்பாரின்றி, கறப்பவ ரின்றித் திரிந்தன. திருடுவதிலும் திருட்டுப் போகாமல் கண்காணிப்பதிலுமே அந்த மக்களின் பொழுதெல்லாம் போயிற்று. உழைக்காவிடில் உயர்வு எப்படி ஏற்படும்? அவர்கள் மிக மிக ஏழைகளாக இருந்தார்கள். மன்னர் பார்த்தார். இவர்களின் நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று விரும்பினார். தம் சேனாதிபதிகளில் ஒருவனை முஷ்டிகன் என்பவனை அந்தப் பகுதிக்கு அனுப்பி அவர்கள் வாழ்வை வளப்படுத்த உத்தரவிட்டார். முஷ்டிகன் ரொம்பக் கண்டிப்பான சேனாபதி. நாட்டின் அந்தப் பகுதியில் சட்டதிட்டங்களை ஏற்படுத்தினான். யாராவது எதையாவது திருடினால் அதற்குப் பெரிய பெரிய தண்டனைகளை விதித்தான். ஒரு பசுவைத் திருடியவருக்கு முப்பது கசையடிகள். எல்லாத் தண்டனைகளுமே கசையடிகளாகத்தான் தரப்பட்டன. சில நாட்களில் அந்தப் பகுதி மக்கள் எல்லாருமே கசையடி பெற்றவர்களானார்கள்.

இது கொஞ்ச நாட்கள்தான். நாளாக ஆக அப்பகுதி மக்கள் நாகரிகமடைந்து திருட்டுத் தொழிலை விட்டுத் திருந்தி விட்டார்கள். ஆனாலும் முஷ்டிகன் தன் கசையடி விழாவை விடவில்லை. ஜனங்கள் நல்லவர்களாக மாறியும்கூட அந்த முரட்டுச் சேனாதிபதி முஷ்டிகன் கசையடி கொடுப்பதைத் தொடர்ந்து செய்து வந்தான். யாருடைய வீட்டு நாய்க் குட்டியாவது அல்லது குழந்தையாவது அது தன் இச்சைப்படி உங்களைத் தொடர்ந்து வந்தால்கூட நீங்கள்தான் அவைகளைத் திருடிச் செல்வதாகக் குற்றம் சாட்டிக் கசையடி தந்தான் முஷ்டிகன். ஒரு சிறு பையன் மாந்தோப்பில் மாங்காய் அடித்தாலும்கூடக் கசையடி தவறாது கிடைக்கும்.

முஷ்டிகனின் கசையடி ஆட்சியைச் சகிக்க முடியாத மக்கள் அவனைக் கொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கோபமடைந்து கையில் வால், வேல், கம்புகளுடன் ஒரு நாள் அவன் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்கள். அவன் அரண்மனைக்குப் போகப் பாலைவனத்தைத் தாண்டியாக வேண்டும். நடுப் பாலைவனத்தில் ஓர் ஈச்ச மரத்தின் அடியில் ஒரு தொண்டு கிழவர் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள், கோபம் கொண்ட இந்த மக்கள். அந்த வயோதிகரின் முகத்தில் ஏதோ ஓர் அசாதாரண ஒளி வீசியதைக் கண்டவர்கள் அவர் முன் மண்டியிட்டு வணங்கித் தங்கள் கதையைக் கூறினார்கள்.

பேரீச்ச மரத்தடிக் கிழவர் பதில் ஏதும் கூறவில்லை. மௌனமாக ஒரு கறுப்புக் குச்சியை எடுத்து மணலில் ஒரு பெரிய வட்டம் வரைந்தார். பிறகு அந்த வட்டத்தை அந்தக் குச்சியினால் சுட்டிக் காட்டினார். ஆவலோடு எல்லாரும் மணல் வட்டத்தைக் கவனித்தார்கள். என்ன ஆச்சரியம்! அந்த முதியவர் வரைந்த வட்டத்தினுள் டெலிவிஷன் மாதிரிக் காட்சிகள் தோன்றலாயின! ஓர் அழகான வீடு. சுற்றியும் தோட்டம். பழ மரங்கள். அவர்கள் ஊர் வீடு மாதிரியே இருந்தது. திராட்சைக் கொடி படர்ந்து குலை குலையாகக் காய்த்துத் தொங்கின. தர்ப் பூசணிக் கொடி. அதில் மூட்டை மூட்டையாகத் தர்ப் பூசணிப் பழங்கள். ரோஜா, மல்லிகை, ஆரஞ்சு, எலுமிச்சை, கொய்யா — ஆகா! எத்தனை பழ வகைகள், மலர்ப் பாத்திகள்...? தோட்டத்தின் நடுவே ஒரு நீரூற்றோடு கூடிய தடாகம். இந்த அழகான காட்சியை எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அங்கு ஒரு பெண் ஒட்டகம் புகுந்தது. உள்ளே வந்த அந்த ஒட்டகம் தன் அகலமான பாதத்தை நீரூற்றுக் குளத்தில் வைத்தது. தெளிந்த நீரைக் கலக்கிக் குழப்பியது. பிறகு அது அந்த வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தில் கண்டபடி அலைந்தது. ஒட்டகம் உயரமான பிராணியல்லவா? திராட்சைக் குலைகளை அநாயாசமாகத் தின்று தீர்த்தது. அது மட்டுமா? திராட்சைக் கொடியை வாயால் பற்றி இழுத்துக் கீழே போட்டு மிதித்துத் துவைத்தது. எலுமிச்சை மரத்தின் மீது தன் உடல் தினவைப் போக்கிக் கொள்ள உராய்ந்தது. எலுமிச்சம் பழங்களெல்லாம் கீழே உதிர்ந்து உருண்டன. மரமே வேரோடு பெயர்ந்து கீழே சாய்ந்தது. ஒட்டகத்துக்கு முட்செடி ரொம்பப் பிடிக்குமில்லையா? ரோஜாப் பாத்திகளில் போய் அப்படியே படுத்தது. சர்வநாசம்! தர்ப் பூசணிகள் உடைந்து பாழாயின.

காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள், அது தத்ரூபமாக இருந்ததால் நிஜமென்று ஏமாந்து, இப்படி நல்லவைகளை நாசமாக்கும் ஒட்டகத்தை அடித்து விரட்டக் கழிகளை ஓங்கித் தயாரானார்கள். ஆனால், தாங்கள் பார்ப்பது மணலில் தோன்றும் வெறும் மாயக் காட்சி என்பதை உணர்ந்ததும் மௌனமானார்கள். அப்போது அந்தக் காட்சியில் ஒரு மனிதன் தோன்றினான். தோட்டத்தை ஒரு

முறை நோக்கிய அவன் ஒட்டகம் விளை வித்த நாசங்களையும் அறிந்து கொண் டான். வந்திருந்த ஜனங்கள், அவன் அந்தக் கெட்ட ஒட்டகத்தைக் கொல் லப் போகிறான் என்றுதான் எண்ணி னார்கள். ஆனால் அவன் அதற்கு மூக்கணாங் கயிறு போட்டான். அதன் மீது ஏறி அமர்ந்து கொண்டான். சவாரி செய்யலானான். மணல் வட்டத்தில் மாயக் காட்சியில் ஜனங்கள் பார்த்துக் கொண்டே யிருந்தார்கள். ஒட்டகத் தில் அவன் போய்க் கொண்டேயிருந் தான். பகல் மங்கி இரவு வரலாயிற்று.

ஒட்டகத்திலிருந்து அந்த மனிதன் கீழே இறங்கினான். அதன் பாலைக் கறந் தான். இப்போது நன்றாக இருட்டிவிட் டது. வானத்தில் நட்சத்திரங்கள் மினுக்கிடலாயின. அந்தப் புதிய மனித னும் ஒட்டகமும் மணல்வெளியில் படுத்து உறங்கலானார்கள்.

ஜனங்கள் பார்த்துக் கொண்டே இருக்கும் போது காட்சி மாறியது. கிழக்கு வெளுத்தது. ஒளி பரவியது. சூரியன் உதயமானான். காலைக் கதிரவ னின் ஒளியினூடே அவன் மறுபடியும் ஒட்டகத்தின் மீது ஏறிப் பிரயாணத் தைத் தொடர்ந்தான். அவன் இப்போது ஒரு பேரீச்ச மரத்தின் அருகே வந்து கொண்டிருந்தான். அது அந்த முதி யவர் அமர்ந்திருக்கும் இடம்போலவே இருந்தது. மரத்தினருகே ஒரு கிணறு இருந்தது. பேரீச்ச மரத்தினடியில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு உயிர் இல்லை. இறந்து விட்டிருந்தாள், அந்தப் பெண். அவள் மடியில் ஒரு குழந்தை. ஒட்டகத்தில் வந்த மனிதன் குழந்தையைக் கண்டதும் கீழே குதித் தான். வேகமாக ஒட்டகத்தின் பாலைக் கறந்தான். அதை அந்தக் குழந்தைக்குக் கொடுத்தான்.


இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள், "ஆஹா !" என்று அவன் கருணையை எண்ணி வியந்தார்கள். "அந்த ஒட்டகம் மட்டும் இல்லாவிட் டால் அந்தக் குழந்தையும் பசியால் இறந்து போயிருக்கும்" என்று தங்க ளுக்குள் சொல்லிக் கொண்டார்கள். உடனே மணல் வட்டத்து மாயக் காட்சி மறைந்தது. கிழவர் குச்சியால் தாம் வரைந்த வட்டக் கோலத்தைக் கலைத் தார். கைகளை மார்போடு சேர்த்துக் கட்டிக் கொண்டு குனிந்து அதில் முக வாயைப் பதிய வைத்தபடி மௌன மாகத் தூங்கலானார்.


முதியவரின் செயலைக் கண்டு அங்கு வந்தவர்கள், "என்ன இது, இந்தப் பெரியவரிடம் நம் குறை சொல்லி முறையிட்டோம். ஆனால் அவர் பரி காரம் ஏதும் கூறாமல் மணலில் ஏதோ பெண் ஒட்டகத்தின் மாயக் காட்சி களைக் காட்டிவிட்டு மௌனமாகிவிட் டாரே!" என்று குறைப்படலானார்கள். அவர்களின் தலைவனாக இருந்த ஒருவன் சில விநாடிகள் சிந்தனை செய்த பிறகு, "ஒட்டகக் காட்சியின் கருத்து இப் போதுதான் எனக்குப் புரிகிறது. ஒவ் வொன்றும் அதனதன் இடத்தில் இருக்குமானால் எல்லாம் நல்லதாகவே நடக்கும் என்பதுதான் அந்தக் காட்சி களின் பொருள். ஒட்டகம்தான் சேனாதி பதி முஷ்டிகன். நல்லதொரு மலர்த் தோட்டத்தில், பழச் சோலையில் ஒட்ட கம் இருந்தபோது அது நன்மை பயக்க வில்லை. ஆனால் பாலைவனத்தில் அதுவே ஓர் உயிரைக் காத்தது. ஆகவே, சேனாதிபதி முஷ்டிகனைக் கொல்ல நாம் நினைத்தது தவறு. இங்கு வந்த அவரது காரியம் முடிந்துவிட்டது. நாம் முன்பு இருந்தது போன்று பண்படாத மக்கள் வேறு இடங்களில் இருப் பார்கள். இனி அவர் அங்கு போக வேண்டியவர்" என்றான்.

ஆகவே, முஷ்டிகனை வேறு இடத் துக்கு, அங்குள்ள மக்களை நல்வழிப் படுத்த அனுப்பி வைத்தார்கள்" என்று தன் கதையை முடித்தான் எலிவால்.

"அவ்வளவுதானா, கதை?" என்று கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

"ஆமாம். இப்போது சொல்லுங்கள். நாங்கள் ஒன்பதாம் பந்து ஆடியது தவறா? விளையாடும் வயதில் எங்களை விளையாட விடாமல் இப்படி ஒரு தடை, விதிக்கலாமா?" என்று கேட்டான்,





எலி வால். பஞ்சாயத்துத் தலைவர் யோசித்தார். ''சரி..... நீங்கள் விளையாடலாம். உங்கள் விளையாட்டு இல்லாவிடில் ஊர் கலகலப்பாகவே இருக்காது. பெரியவர்கள் உழைத்தால் போதும். குழந்தைகளாகிய நீங்கள் விளையாடி மகிழுங்கள்'' என்றார்.

''ஆகவே, துஷ்டத்தனம் செய்த எங்களை நீயும் மன்னிப்பாய் இல்லையா?'' என்றன உண்ணிக் குழந்தைகள்.

''சரி.... சரி.... ரொம்ப விஷமம் செய்யாமல் விளையாடுங்கள்'' என்று அவைகளை வெளியே விரட்டினேன்'' என்று கூறிய பெரிய உண்ணி, பூனையின் வால் நுனி ரோமத்தில் உட்கார்ந்து கொண்டே கேட்டது: ''பூனையாரே! நான் இனி உன்னைக் கடிக்கவே மாட்டேன். என்னை விட்டாயானால் நான் குதித்து ஓடிப் போய்விடுகிறேன்'' என்றது.

'''அதுவும் நியாயம்தான். இனி என்கிட்டே வராதே, ஓடிப் போ' என்று உண்ணிக்கு விடுதலை அளித்தேன். அதே மாதிரி நீயும் எனக்கு விடுதலை அளிப்பாயல்லவா? இந்தத் தடவை மட்டும் மன்னித்துவிடு. உன் அருமைப் பறவையை நான் பயமுறுத்தியதென்னவோ தப்புத்தான். என் பூனைக்குணம் எப்படிப் போகும்? பறவைகளைக் கண்டால் அப்படி ஓர் ஆவல் எங்களுக்கு, எங்களைக் கண்டால் அப்படியோர் ஆவல் உண்ணிகளுக்கு?'' என்றது பூனை.

''பூனையின் பேச்சில் நியாயம் இருப்பதை உணர்ந்து நானும் அதற்குத் தண்டனை தரவில்லை....'' என்ற வாசு பிறகு கேட்டான்.


''டீச்சர், என்னையும், பாமினியையும் நீங்கள் இந்தத் தடவை மன்னித்து விடக் கூடாதா? நாங்கள் வேண்டுமென்றே வந்து உங்கள் மீது மோதினோமா, டீச்சர்?'' இதே சமயத்தில் சாப்பாட்டு நேரம் முடிந்து மாலை வகுப்புக்களுக்கான மணியும் அடித்தது. சாந்தா டீச்சரும் முகத்தில் சிரிப்பு மலர, ''சரி, சரி... வகுப்புக்குப் போங்கள். மன்னிப்பதுதான் மனித குணம். உண்ணியையும் பூனையையும் விடவா நாம் தாழ்ந்துவிட்டோம்? ஓடுங்கள், வகுப்புக்கு!'' என்று எழுந்திருந்தார்.


மாலையில் வாசு வீட்டுக்குப் போன போது அவன் தம்பி படம் போட்ட மரக் கட்டைகளை அடுக்கிக் கோபுரம் கட்டி விளையாடிக் கொண்டிருந்தான். அதன் உச்சிக் கட்டையில் ஓர் ஒட்டகத்தின் படம். அடுத்த கட்டையில் ஒரு சேனாதிபதியின் படம். அதற்குக் கீழேயுள்ள கட்டையில் எலி வால் பையன் சித்திரம். அவனுக்குக் கீழ் உள்ள கட்டையில் ஓர் உண்ணியின் உருவம். அடிக் கட்டையிலே ஒரு பூனை கண்ணை மூடிக் கொண்டு நின்றது. எத்தனை பொருத்தம்! வாசு தம்பியின் கோபுரத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான். நீங்களும்தானே சிரிக்கிறீர்கள்?

மூளைக்கு வேலை : விடைகள்

வித்தியாசங்கள்; மொத்தம் எட்டு: 1. குதிரைக்குக் கடிவாளமில்லை. 2. குதிரை அருகேயுள்ள சட்டைக்காரப் பெண்ணின் உடை மாற்றம். 3. அம்மா நெருப்புக் கோழியின் தலையில் உள்ள ரோமம். 4. ஓடும் நெருப்புக் கோழிகளில் வலப் பக்கத்திலுள்ளதின் வாய் அமைப்பு. 5. நெருப்புக் கோழிக் குஞ்சின் வலது கால். 6. அம்மா நெருப்புக் கோழியின் வலக் கால் விரல். 7. அம்மா நெருப்புக் கோழியின் கால்கள் அருகேயுள்ள கற்களின் எண்ணிக்கை. 8. உடைந்த முட்டையின் இடது பக்கத்து ஓட்டின் அமைப்பு.


விளையாட்டுக்கள்: 1. கிரிக்கெட் 2. டென்னிஸ் 3. பாட்மிண்டன் 4. கால் பந்து 5. பௌலிங் 6. ரக்பி 7. அம்பு விடுதல் (ஆர்ச்சரி) 8 டேபிள் டென்னிஸ் 9. க்ரோகட் 10. ஹாக்கி 11. போலோ 12. கால்ஃப் 13. டார்ட்ஸ்.



பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
பாலு, இதென்ன கோலம்? ஏண்டா இப்படி? இப்போ எங்கே போறே நீ.
ஃபுட்பால் விளையாடத்தாம்மா போறேன்.
ஏண்டா பாலு, ஃபுட்பால் விளையாடும்போது ஏன் சண்டை வரணும்? ஒரு விளையாட்டுன்னா அதனோட விதிமுறைகளைத் தெரிஞ்சுக்கணும். அப்போ தகராறுகளுக்கே இடமிருக்காது. முதல்லே ஃபுட்பால் ரூல்ஸைக் கத்துக்கோ.
சரிப்பா...
டிபன் சாப்பிட்ட பிறகு.
மறுபடியும் விளையாடக் கிளம்பியாச்சா?
நான் சொன்னதையெல்லாம் நினைவில் வைத்துக்கொள். தகராறே வராது. விளையாட்டு விதிகளுக்குக் கட்டுப்பட்டு விளையாடணும். தெரிஞ்சதா?
ஆகட்டும்பா...
சற்று நேரம் கழித்து.
என்ன, பாலு எப்படி விளையாடறான்? தகராறு ஏதுமில்லையே?
அது இல்லாம எப்படி இருக்கும்? இப்பத்தான் வாக்குவாதம் ஆரம்பமாயிருக்கு. நீங்க போய்ச் சண்டை வராம சமாதானப்படுத்திட்டு வாங்க. எழுந்திருங்க...
நீ ஆடினது ஃபவுல் ஆட்டம்.
ஃபவுல் தான்.
இல்லே, அது ஃபவுல் இல்லே.
இல்லே... இல்லே... இல்லே...
ஆ... ஆ...! பசங்களா, கொஞ்சம் பொறுங்க. இதுக்கு ஒரு முடிவெடுக்கலாம்.



இந்த ஆட்டத்துக்குத் தேவையானது ஒரு 'ரெஃபரி.' 'ரெஃபரி' இருந்தால் வாக்குவாதங்களுக்கே இடமிருக்காது. நாம் இப்போ முதலிலிருந்து ஆட ஆரம்பிப்போம், என்ன?
சற்றைக்கெல்லாம்.
மைதானத்தை விட்டு வெளியே போ. இம்மாதிரியான ஆட்டத்தை அனுமதிப்பதற்கில்லை.
ஆ! படா 'ரெஃபரி' வந்துட்டாரு. மைதானத்தை விட்டு உம்மை வெளியேத்த ஆளோடு வரேன் பாரு...
'பெனல்டி'...!
அதோ அந்த ஆளுதான் அப்பா.
ஓ! அவருதானா? கவனிச்சுக்கறேன்.
என்ன வாத்தியாரே! என் பையனை வெளியே அனுப்பிச்சிட்டியாமே. உனக்கு 'ஃபுட்பால்' பத்தி என்னய்யா தெரியும்? இப்பக் கூச்சல் போட்டியே 'பெனல்டி'ன்னு, அது 'ஃபெனல்டி'யே இல்லே, தெரிஞ்சுக்கோ...
ஓ...ஹ்...ஹோ!
அது சத்தியமா பெனல்டி தான். உனக்கும் உன் புள்ளைக்கும் தெரிஞ்சதை விட எனக்குப் ஃபுட்பாலைப் பத்தி அதிகமாத் தெரியும். புரிஞ்சுக்கோ.
சும்மா அலட்டிக்காதேய்யா. கிரிக்கெட் மட்டைக்கும் 'ஃபுட்பால்' கோல் போஸ்டுக்கும் வித்தியாசம் தெரியாத ஆளு நீ. பசங்களைச் சுதந்திரமா விளையாட விட மாட்டியா நீ?
அரை மணி கழித்து.
மறுபடியும் சண்டையா? உன் அப்பா எங்கேடா? உங்களைச் சண்டை இல்லாம விளையாடப் புத்தி சொல்ல வந்தாரே?
அப்பா இதோ வரார் அம்மா!
...இருந்தாலும் நாம்தான் ஜெயிச்சோம், இல்லியா பாபு?

கைகளில்லாத கட்டிடக் கலைஞர்






ஓடைக் கரை யோரம், குட்டைகளின் அருகே கறுப்பு நிற உடலும், வெள்ளைக் காலுமாக ஒரு வகைக் குளவி சுறுசுறுப்பாக மண்ணை உருட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். இது குளவியில் ஒரு வகை. 'ஆர்கன் பைப் குளவி' என்று பெயர். சரியான அமைப்பிலும் அளவிலும் மண் உருண்டை தயாரானதும் இக் குளவி இதை எடுத்துக் கொண்டு முன்பே சேமித்து வைத்திருக்கும் மண் உருண்டைகளோடு கொண்டு சேர்க்கும். தேவையான அளவு இப்படி மண்ணைச் சேமித்துக் கொண்டதும் கூடு கட்ட ஆரம்பிக்கும். மண்ணை இளக்கி இழைத்து வரிசையாக அடுத்தடுத்து வளைவான குழல்களை அடுக்கியது போல் கூடுகளைக் கட்டும். இப்படி உருவாக்க அதன் கால்களும் வாயும் மட்டுமே பயன்படுகின்றன. இப்படிக் கட்டிய கூட்டினுள் சிலந்திகளைப் பிடித்துக் கொட்டி, உணர்விழக்கச் செய்து கொண்டு வந்து நிரப்பிப் பின் முட்டைகளை இட்டுக் கூட்டின் வாயை மூடிவிடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்களுக்கு ஆகாரம் தயாராக இருக்கும்.

☐ இன்னொரு வகைக் குளவி. இதற்குக் காகிதக் கூடுக் குளவி என்று பெயர். (கீழுள்ள படம்) உருவத்தில் பெரிய குளவி இது. இலைகளையோ மரப் பட்டைகளையோ வாயினால் அரைத்துக் கூழாக்கிக் கொண்டு, தரையில் உள்ள துவாரங்களிலோ, மரக் கிளைகளிலோ இது தன் கூட்டைக் கட்டுகிறது. இக் கூட்டினுள் முட்டையும் புழுக்களும் பத்திரமாக வளர்கின்றன. நீ நினைப்பதை விட இந்தக் கூடுகள் மிக்க உறுதியானவை. பருவ நிலைகளிலிருந்து பாதுகாக்கத் தக்க வகையில் அமைக்கப்பட்டவை இக் காகிதக் கூடுகள்.


☐ களிமண்ணினால் கூடு கட்டும் பூச்சிகளிலேயே மிகத் திறமை வாய்ந்தது பானைக் கூட்டுக் குளவிதான். முதலில் இது தன் கூட்டைக் காகிதக் குளவியைப் போலவே காகிதத்தினால் அமைக்கிறது. அதன் பிறகு காகிதக் கூழைக் களிமண்ணுடன் கலந்து தன் கூட்டின் சுவர்களுக்குப் பூச்சு வேலை செய்கிறது. கற்சுவரைப் போல் அத்தனை உறுதியாக இருக்கும் இந்தப் பூச்சு. மரத்தில் தகுதியான கிளைகளைத் தேர்ந்தெடுத்து இக் கூட்டுக்குக் கடைகால் அமைத்து அஸ்திவாரம் போடுகிறது. அதன் பிறகு வேகம் வேகமாக ஒரே சீராகச் சுழன்று சுழன்று தன் உடலினால் பானை போன்ற அமைப்பில் கூட்டின் உட்புறச் சுவரைக் குடைந்து உருவாக்குகிறது. குடத்தின் வாய் போலவே உட்புறம் குழிவாக அத்தனை அழகாக இது கூட்டின் வாயையும் அதற்கு விளிம்பையும் கூட அமைக்கிறது. கூடு உருவானதும் இதற்குள் கம்பளிப் பூச்சிகளைத் தன் கொடுக்கினால் கொட்டி உணர்விழக்கச் செய்து கொண்டு வந்து போட்டு நிரப்புகிறது. பிறக்கப் போகும் தன் குழந்தைகளுக்குப் புத்தம் புதிய உணவு இவை! கம்பளிப் பூச்சிகள் இக் குளவியின் கொட்டு விஷத்தால் உணர்விழந்து கிடக்குமே தவிர உயிர் இழந்திருக்காது. ஆகவே புதிய உணவுதானே? இனி தன் குடும்பத்தை உருவாக்க முட்டைகளை இடும் இக் குளவி. அந்த முட்டைகளை மெல்லிய நூலிழையால் கம்பளிப் பூச்சிகளின் மேலாகத் தொங்க விட்டிருக்கும். கூட்டின் குட வாயைக் களிமண் கொண்டு மூடிவிடும். முட்டையிலிருந்து புழுக்கள் வெளிவந்ததும் சுவையான கம்பளிப் பூச்சி ஆகாரம் தயாராக இருக்கும். வயிறார உண்டு உறங்கியபடி மாரிக் காலம் முழுதும் இந்தப் பானைக் கூட்டுக் குள்ளேயே இருக்கும். மாரிக் காலம் முடிந்து வெது வெதுப்பான கோடைக் காலம் ஆரம்பமாகும்போது புழுக்கள் பியூபா நிலைக்கு மாறி, பிறகு குளவிகளாக உருப்பெறுகின்றன. இந்நிலையில் தங்கள் மண் சிறையின் பக்கவாட்டுச் சுவரைக் கடித்துக் குடைந்து துவாரம் செய்து இவை வெளியேறுகின்றன. வெளி வரும் போது பலவீனமாகவும் அழகற்றதாகவும் காணப்படும். ஆனால் சீக்கிரமாகவே இவை பறக்க ஆரம்பிக்கும். கறுப்பும் மஞ்சளும் கலந்த இடை சிறுத்த துருதுருப்பான குளவியாக. ஒரு ரகசியம் தெரியுமா? இப்படி அழகான கூடு கட்டுவதெல்லாம் பெண்குளவிகள் தான்!

- **கிருஷ்ணவேணி**









மாத வருவாய் திட்டம்

நீங்கள் ஓய்வு பெற்றாலும் உங்களுக்கு மாதந்தோறும் வருமானம் கிடைக்க கனரா பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட் இப்போது மாத வருவாய்த் திட்டத்தை உங்களுக்கென்றே உருவாக்கியிருக்கிறது.

உங்களுடைய பிள்ளைகள் படிப்பை முடித்து வேலைக்கு போய்க் கொண்டிருக்கலாம், அல்லது உங்கள் பெண்களை திருமணம் முடித்து புகுந்த வீடு அனுப்பியிருக்கலாம்; இருந்தாலும் உங்களுக்கென்று மாத வருமானம் கிடைத்தால் கவலையில்லாமல் இருக்கலாம் அல்லவா?

பத்து வருஷங்களுக்கு மாதந்தோறும் ரூ. 100/- கட்டிக்கொண்டு வந்தால் அடுத்த 10 வருஷங்களுக்கு மாதம் ரூ. 205/- வருவாய் கிடைக்கும்.

இந்தத் திட்டம் ஓய்வு பெறுபவர்களுக்கு மட்டுமல்ல, சிறுவர், சிறுமியர்களுக்கும் வருங்கால வாழ்க்கைக்கு ஏற்றதொரு திட்டம்.

— சிநேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி

கனரா பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட்

ESTD. 1906

(கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்)


பதிவு அலுவலகம்: உடுப்பி நிர்வாக அலுவலகம்: மங்களூர்

maa/CBC/241-H Tam.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

வாங்குவீர்

எச்எம்வி
ரெக்கார்ட் ப்ளேயர்



எச்எம்வி பியஸ்டா

ஒரு முழுமையான ரெகார்ட் ப்ளேயர்

ரூ. 300 மட்டுமே

(எக்ஸைஸ் தீர்வை உள்பட.
உள்ளூர் வரிகள் தனி)

எச்எம்வி பியஸ்டா நீங்கள் வியப்புறும் வகையில் தெளிவாக ஒலிக்கிறது. காரணம்: அதன் ஸாலிட் ஸ்டேட் ஆம்ப்ளி பையர், சன்னமாய் இயங்கும் பிக்-அப் கருவி, கழற்றி மாட்டக் கூடிய காபினெட்டில் அமைந்த ஸ்பீக்கர். அது மட்டுமா? அதைச் சுலபமாய்க் கையில் எடுத்துச் செல்லலாம். ஏஸி மெயின்ஸ் அல்லது பாட்டரியில் இயங்கக் கூடியது.


எச்எம்வி காலிப்ஸோ

உங்கள் ரேடியோவுடன்
இணைந்து இயங்கும் ப்ளேயர்

ரூ. 193 மட்டுமே

(எக்ஸைஸ் தீர்வை உள்பட.
உள்ளூர் வரிகள் தனி)

எச்எம்வி காலிப்ஸோவை உங்கள் ரேடியோவுடன் இணையுங்கள். அதே விநாடியில் அது ரேடியாகிராம் ஆகிறது! நீங்கள் விரும்பும் முறையில் இசைத் தட்டுக்கள் ஒலிப்பதற்கு உறுதியாக உதவுகிறது. அதன் இலேசான பிக்-அப் கருவி, ஏஸி மெயின்ஸ் அல்லது பாட்டரியில் இயங்க வல்லதாக இரு வகைகளில் கிடைக்கிறது.



ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

GC/6486-A-1

REGISTERED NO. M. 9040



everest/122d/PP Tam